20.10.2014

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>தமிழகத்தில் மழை நீடிக்கும்</u>**

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை தொடர்ந்து நீடிப்பதால், தமிழகத்தில் மேலும் சில நாள்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்து. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளது. இதனால், மாநிலம் முழுவதும் கடந்த இரண்டு நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், வங்கக் கடலில் இலங்கை- தமிழக கடற்கரையில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிக்கிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:**

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதனால் தமிழகத்தில் வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, மாநிலம் முழுவதும் அடுத்த இரண்டு நாள்களுக்கு மழை தொடரும். சில இடங்களில் பலத்த மழை பெய்யவும் வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் காரைக்காலில் 120 மி.மீ. மழையும், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் 110 மி.மீ., பாபநாசத்தில் 100 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

## ஆறுதலும் கவலையும்!

இந்த ஆண்டு மழையின் அளவு குறைவாக இருந்தும்கூட, தேசிய அளவில் நெல் சாகுபடியின் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. நெல் மட்டுமல்ல, பருத்தி சாகுபடியின் பரப்பளவும் கடந்த ஆண்டை விட அதிகம். மத்திய விவசாய அமைச்சகத்தின் புள்ளிவிவரப்படி குறுவை சாகுபடிப் பரப்பளவு (1,019.26 லட்சம் ஹெக்டேர்) கடந்த ஆண்டு சாகுபடிப் பரப்பளவைவிட (1,044.69 லட்சம் ஹெக்டேர்) குறைவுதான் என்றாலும், நெல் சாகுபடியின் அளவு அதிகரித்திருப்பது மிகப் பெரிய ஆறுதல். இந்த ஆண்டு மழையின் அளவு, தற்போதைய நிலவரப்படி, நமது தேவையைவிட 11% குறைவாக இருந்தும்கூட, நெல் சாகுபடியின் பரப்பளவு அதிகரித்திருக்கிறது. செப்டம்பர் 26ஆம் தேதி வரையிலான நிலவரத்தை ஒப்பிடும்போது, கடந்த ஆண்டின் 374.27 லட்சம் ஹெக்டேரைவிட இந்த ஆண்டுக்கான நெல் சாகுபடி 374.87 லட்சம் ஹெக்டேராக அதிகரித்திருக்கிற அதே நேரத்தில், ஏனைய தானிய விதைகள், எண்ணெய் வித்துகள், பருப்பு வகைகளின் சாகுபடிப் பரப்பளவு குறைந்திருக்கிறது என்பதையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த 2013-14 ஆண்டைவிட குறுவை சாகுபடிக்கான மொத்த உற்பத்தி அளவு 7% குறைவாகவே இருக்கும் என்று கருதப்படுகிறது. முழுமையான விவரங்கள் அடுத்த ஆண்டுதான் கிடைக்கக் கூடும். அதிக அளவில் நெல் சாகுபடி செய்யும் உத்தரப்பிரதேசமும், ஹரியாணாவும் மழையின் அளவு குறைவாக இருந்ததால் இந்த ஆண்டை வறட்சி ஆண்டாக அறிவித்திருக்கின்றன. அப்படி இருந்தும் ஒட்டுமொத்த நெல் உற்பத்தி அதிகரித்திருப்பதுதான் அமைச்சகத்தை வியப்படையச் செய்திருக்கும் புள்ளிவிவரம். பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், தானியங்களின் சாகுபடிப் பரப்பளவு தொடர்ந்து குறைந்து வருவது கவலையளிக்கும் பிரச்னை. உடனடியாக

மத்திய, மாநில அரசுகள் முனைப்புக் காட்டி குறைந்தபட்சம் எண்ணெய் வித்துகள், பருப்புகளின் சாகுபடிப் பரப்பளவு அதிகரிக்கவும், விளைச்சல் அளவு அதிகரிக்கவும் ஆவன செய்யாமல் போனால் அது ஒட்டுமொத்த உணவுப் பொருள்களின் விலைவாசியைக் கணிசமாக உயர்த்தி, மக்கள் மத்தியில் பரவலான அதிருப்திக்கு வழிகோலும். அகில இந்திய அளவிலான நிலைமை இதுவென்றால், தமிழகத்தின் நிலைமை மெச்சும்படியாக இல்லை. உணவுப் பொருள்களின் விலைவாசி 2011-12 உடன் ஒப்பிடும்போது 4.7% அதிகரித்து 12.1% உயர்ந்திருக்கிறது. நமது அரிசித் தேவை 92.63 லட்சம் டன் என்றால் 2013-14இல் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி 69.61 டன் மட்டுமே. பருப்பு வகைகளை எடுத்துக் கொண்டாலும் தமிழகத்தின் தேவையான 10.01 லட்சம் டன்னில், நமது உள்ளூர் உற்பத்தி வெறும் 4.05 லட்சம் டன் மட்டும்தான். கடந்த ஆண்டு தமிழக உணவுப் பொருள் உற்பத்தி அளவு மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. 2011 உடன் ஒப்பிடும்போது 101.52 லட்சம் டன்னிலிருந்து 56.05 லட்சம் டன்னாகச் சரிந்து 45% வீழ்ச்சியை எதிர்கொண்டது நமது விவசாய உற்பத்தி. அரிசி உற்பத்தி 46% சரிவைச் சந்தித்தது. இப்போது, அந்த வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுந்திருக்கிறோம். ஆனால், அது மட்டுமே ஆறுதலாகிவிடாது. 10ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002-07) விவசாய நிலத்தின் பரப்பளவும், உற்பத்தி அளவும் அதிகரித்தன. அதுவே 11வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விளைநிலப் பரப்பளவில் 5.76% சரிவையும், ஒரு ஹெக்டேருக்கான உற்பத்தி அளவில் 2.65% குறைவையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை. தமிழக வேளாண்மைத் துறை அதிகாரிகளின் தகவலின்படி, 1970இல் 70 லட்சம் ஹெக்டேராக இருந்த விளைநிலப் பரப்பளவு இப்போது 45 லட்சம் ஹெக்டேராகக் குறைந்து விட்டிருக்கிறது. விளைநிலங்களின் அளவு குறைந்தது மட்டுமல்ல. சராசரியாக ஒரு ஹெக்டேருக்குக் கிடைத்திருக்க வேண்டிய விளைச்சலின் அளவும்

மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. இன்றைய மழையின் அளவு, தண்ணீர், தட்பவெப்ப நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 6 டன் நெல் விளைய வேண்டும். ஆனால், அது வெறும் 3.9 டன்னாக மட்டுமே காணப்படுகிறது. ஒருபுறம் விளைநிலங்கள் வீடுகளாகவும், தொழிற்சாலைகளாகவும் மாறிக் கொண்டிருக்கிறன. இன்னொருபுறம், நமது விளைநிலங்களின் உற்பத்தித் திறன் குறைந்து விளைச்சல் பாதிக்கப்பட்டு வருகிறது. விளைச்சலை அதிகரிக்கப் பல வழிமுறைகள் இருந்தும் அதில் நாம் போதிய கவனம் செலுத்தாமலே இருக்கிறோம். கூட்டுறவுப் பண்ணை முறை இதற்கு விடையாக இருக்கக் கூடும். வேளாண்மையில்தான் நமது வலிமை அடங்கி இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது!

**<u>கேளம்பாக்கத்தில் 89 மி.மீ. மழை</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், கேளம்பாக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி அதிகபட்சமாக 89 மி.மீ. மழை பதிவானது. வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தொடங்கியுள்ள நிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக அடைமழை பெய்து வருகிறது. சனிக்கிழமை இரவு முழுவதும் தூறல் விழுந்து கொண்டே இருந்தது. ஞாயிற்றுக்கிழமையும் விட்டு விட்டு மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதேநேரம் தீபாவளி வியாபாரம் பார்க்க முடியாத சோகத்தில் சாலையோர வியாபாரிகளும், பட்டாசு கடைக்காரர்களும் ஆழ்ந்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக கேளம்பாக்கத்தில் 89.20 மி.மீ. மழை பதிவானது. மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் பதிவான மழை அளவு நிலவரம் (மி.மீ.ரில்): மாமல்லபுரம் 63, ஸ்ரீபெரும்புதூர் 44.40, தாம்பரம் 39.20, காஞ்சிபுரம் 26.20, செய்யூர் 20.50, திருக்கழுகுன்றம் 17.80, மதுராந்தகம்

10, செங்கல்பட்டு 7, உத்தரமேரூர் 2.

## ஏரிப் பாசன விவசாயிகளுக்கு திறனாக்கப் பயிற்சி

திருவள்ளூர், பூண்டி ஒன்றியத்துக்குள்பட்ட ஏரிப் பாசன விவசாய சங்கத்தினருக்கு சனிக்கிழமை திறனாக்கப் பயிற்சி நடைபெற்றது. திருவள்ளூர் குசஸ்தலை ஆறு கோட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் உத்தரவின் பேரில் பொதுப்பணித் துறை ஒருங்கிணைப்பு, சிறப்புப் பயிற்சியாளர் சகாயம் தலைமையில் ஏரிப் பாசன விவசாயிகளுக்கு திறனாக்கப் பயிற்சி சனிக்கிழமை பூண்டி ஏரி அருகே நடைபெற்றது. இந்தப் பயிற்சியில், பொதுப்பணித் துறையில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஏரியின் கரையை சீரமைப்பது, மதகு, கலங்கல் கட்டுவது, தூர் வாருதல், பாசன வரவு கால்வாய் அமைத்தல், நீர்வரத்துக் கால்வாய் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் குறித்து விளக்கப்பட்டன. இதில் விவசாயிகளின் ஒத்துழைப்பு, பங்களிப்பு குறித்தும் கூறப்பட்டது. மேலும் ஏரிகளில் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அதுகுறித்து உரிய நேரத்தில் தகவல் கொடுத்து அதை அகற்றவும் துணை புரிய வேண்டும் எனவும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதில், பயிற்சியாளர்கள் திலகவதி, பரமேஸ்வரி, தமிழ்ச்செல்வி, பிரதீபா, லதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தொடர் மழை: நாட்டு காய்கறிகள் விளைச்சல் அதிகரிப்பு

ஆண்டிபட்டி பகுதியில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வருவதால் நாட்டுக் காய்கறிகள் மற்றும் கீரைகள் வரத்து அதிகரித்துள்ளது. ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள புள்ளிமான் கோம்பை, அணைக்கரைபட்டி, பாலக்கோம்பை, ஏத்தக்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் தக்காளி, அவரைக்காய், புடலங்காய், மிளகாய் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. இப்பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால் விளைச்சல் அதிகரித்துள்ளது. ஆண்டிபட்டி சந்தையில் நாட்டுக் காய்கறிகளான வெண்டைக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், பாவக்காய், வெங்காயம் மற்றும் எலுமிச்சை

வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது. அதே போல் மழையினால் மல்லித்தழை விலை உயர்ந்துள்ளது. ஆனால் புதினா விலை குறைந்துள்ளது. மேலும் ஆண்டிபட்டி காட்டுப் பகுதிகளில் புளிச்சங்கீரை, மகிளம்கீரை, பசலைக்கீரை, பொன்னாங்கன்னி, முடக்காத்தான் போன்ற பல்வேறு கீரைகள் முளைத்துள்ளன. இதனை இப்பகுதி மக்கள் பறித்து வந்து, ஆண்டிபட்டி பகுதியில் குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனை பொதுமக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். இது குறித்து வியாபாரி பழனிக்குமார் கூறியது: தற்போது மழை பெய்துள்ளதால் நாட்டு காய்கறிகளின் வரத்து அதிகரித்து, விலை குறைந்துள்ளது. மேலும் இங்கிலிஸ் காய்கறிகளின் விலை தற்போது உயர்ந்துள்ளது. மேலும் மழை பெய்து வருவதால் இனிவரும் காலங்களில் வெங்காயம்,தக்காளி,முருங்கை விலை உயரும் வாய்ப்புள்ளது என்றார். ஞாயிற்றுக்கிழமை காய்கறிகளின் விலை:(கிலோ) வெண்டைக்காய்-ரூ.8, புடலங்காய்-ரூ.10, பீர்க்கங்காய்-ரூ.8 ,முருங்கை-ரூ.36, பாவக்காய்-ரூ.24, சிறிய வெங்காயம்-ரூ.16, புதினா-ரூ.30,கொத்தமல்லி-ரூ.80என்ற விலையில் விற்பனையாகின்றன.

## மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வருவதால் மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். மாவட்டத்தில் கடந்த செப்டம்பர் மாத இறுதியில் பெய்த மழையில் கூடலூர், கம்பம், போடி, ஆண்டிபட்டி, தேனி, மயிலாடும்பாறை, வருஷநாடு ஆகிய பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கம்பு, மக்காச்சோளம், சோளம், பருத்தி, எள், கடலை, உளுந்து, பாசிப்பயறு, தட்டாம்பயறு, துவரம் பருப்பு ஆகிய மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. இந்த பயிர்கள் தற்போது காய் பருவத்திலும், பால் பிடிக்கும் பருவத்திலும் உள்ளன. இந்த நிலையில் மாவட்டத்தில் கடந்த வாரம் வடகிழக்கு பருவமழை தொடங்கி பெய்து வருவதால் மானாவாரி

விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். நடப்பு பருவத்தில் மானாவாரியில் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கலாம் என்று விவசாயிகள் கூறினார்.

## விருதுநகர் பகுதியில் தொடர் மழை

விருதுநகர் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக பெய்து வரும் பரவலான சாரல் மழையால் கருகும் நிலையிலிருந்த மானாவாரி பயிர்கள் அனைத்தும் பசுமையாகவும், செழிப்பாகவும் உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இம்மாவட்டத்தில் மொத்தம் 1.50 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்கள் உள்ளன. இதில், தற்போது 1.20 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்களில் கிணற்றுப் பாசனம் மற்றும் மானாவாரி சாகுபடி நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் அவ்வப்போது மழை பெய்ததால் பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் அனைவரும் நவதானியங்களை விதைத்தனர். விருதுநகர் வட்டார பகுதிகளான ஆமத்தூர், செவல்பட்டி, வடமலைக்குறிச்சி, சின்னமூப்பன்பட்டி, வெள்ளூர், குமாரபுரம், இனாம்ரெட்டிபட்டி, மருளூத்து, வாய்ப்பூட்டான்பட்டி, வி. முத்துலிங்காபுரம், ஒண்டிப்புலிநாயக்கனூர், வடமலாபுரம், செங்குன்றாபுரம், புதுக்கோட்டை, சங்கரலிங்காபுரம், முத்துலாபுரம், சீனியாபுரம், எரிச்சநத்தம், எல்கைபட்டி, குந்தலப்பட்டி, எலிங்கநாயக்கன்பட்டி மற்றும் செங்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பருத்தி, கம்பு, இரும்புச்சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, பாசிப்பயறு, மொச்சை, குதிரைவாலி மற்றும் தட்டைப்பயறு உள்ளிட்ட பல்வேறு தானியப் பயிர்களை விதைத்திருந்தனர். இந்த நிலையில் விதைத்த நாளில் இருந்து சில வாரங்களாக போதிய மழையில்லாத நிலையில், கடும் வெயில் நிலவி வந்தது. இதனால் பயிர்கள் கருகும் அபாயத்தில் இருந்தன. இதனால் பயிர்களை பார்த்து விவசாயிகள் கவலையடைந்திருந்தனர். இந்நிலையில் கடந்த 3 நாள்களாக தொடர்ந்து பகலிலும், இரவிலும் பரவலாக சாரல் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கருகும் நிலையில் இருந்த பயிர்கள் தற்போது பசுமையாக காட்சி அளிக்கின்றன. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் விஜயமுருகன் கூறுகையில், பயிர்களை விதைத்த நாள்களில் இருந்து போதிய மழையில்லை. இதையடுத்து கடந்த 3 நாள்களாக தொடர்ந்து இரவு நேரங்களில் மழை பரவலாக பெய்து வருகிறது. தற்போது, பெய்துள்ள மழை தானியப் பயிர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இந்நேரம் விவசாயிகள் பயிறு மகசூல் எடுத்திருக்க வேண்டும். ஆனால், விதைப்பு பணிகள் தாமதமாக நடைபெற்றன. மேலும், தொடர்ந்து இந்த மழை நீடித்தால் கண்மாய்கள், கிணறுகளுக்கு நீர் வரத்து அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார். மழை அளவு: இந்நிலையில் சனிக்கிழமை காலை வரையில் பதிவான மழை அளவு விவரம். (மில்லி மீட்டரில்) சிவகாசி-7.4, வெம்பக்கோட்டை-18, கோவிலாறு-17.08, திருச்சுழி-11.05, அருப்புக்கோட்டை-13, சாத்தூர்-15, ஸ்ரீவில்லிபுத்தூர்-11, விருதுநகர்-18.06, திருச்சுழி-10.2, காரியாபட்டி-27.06, வெம்பக்கோட்டை-7.9. ராஜபாளையம், வத்திராயிருப்பு மற்றும் பிளவக்கல் அணைப் பகுதிகளில் தலா 4 மி.மீ. மழை பெய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ளக்கோவில், முத்தூரில் அடைமழை

வெள்ளக்கோவில், முத்தூரில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் தொடர்ந்து அடை மழை பெய்தது. 12 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த மழையால், விவசாயிகள் உள்பட பல்வேறு தரப்பினரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மங்கலப்பட்டி, மாந்தபுரம், ஓலப்பாளையம், கல்லமடை, நாச்சிபாளையம், எரசிணம்பாளையம், லக்கமநாயக்கன்பட்டி சுற்று வட்டாரங்களிலும் ஓரளவு மழை பெய்துள்ளது. வெள்ளக்கோவில் ஞாயிற்றுக்கிழமை வாரச்சந்தை அடைமழையால் வியாபாரமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. இதே போல், பட்டாசுக் கடைகளிலும் கூட்டம் குறைவாகவே காணப்பட்டது.

## பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கல்

பவானியை அடுத்த நெரிஞ்சிப்பேட்டை பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.1.4 லட்சம் சிறப்பு ஊக்கத்தொகை வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் எஸ்.எஸ்.மாரியப்பன் தலைமை வகித்தார். சங்கச் செயலர் கிருஷ்ணன் வரவேற்றார். முன்னாள் எம்.பி. என்.ஆர்.கோவிந்தராஜர், சங்க உறுப்பினர்களுக்கு ரூ.1.4 லட்சம் சிறப்பு ஊக்கத் தொகையை வழங்கினார். சங்க துணைத் தலைவர் ராவுத்தம்மாள், அண்ணா தொழிற்சங்கத் தலைவர் பூபதி, நிர்வாகிகள் துரைசாமி, பழனிசாமி, சங்கர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரியில் பரவலாக மழை

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து 2-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் 385 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில், அதிகபட்சமாக குன்னூரில் 91 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் பதிவான மழை விவரம் (அளவு மி.மீரில்): கெத்தை-51, அப்பர்பவானி-45, பர்லியார்-43, குந்தா-40, கேத்தி-18.2, கொடநாடு-18, கோத்தகிரி, நடுவட்டம், அவலாஞ்சி தலா 15, எமரால்டு-12, உதகை-8, கிளன்மார்கன்-7, கூடலூர்-4, கிண்ணக்கொரை-3 மி.மீ.

## தொடர் மழை: திருச்செங்கோடு பெரிய தெப்பக்குளம் நிரம்பியது

திருச்செங்கோட்டில் தொடர் மழையால் பெரிய தெப்பக்குளம் ஞாயிற்றுக்கிழமை நிரம்பியது. திருச்செங்கோட்டில் நிலவிய வறட்சியின் காரணமாக பெரிய தெப்பக்குளம் வறண்டு காணப்பட்டது. அதில் அமைக்கப்பட்டிருந்த கிணறுகளில் மட்டும் சிறிதளவு நீர் இருந்தது. இந்த நிலையில், பெரிய தெப்பக்குளம் ரூ. ஒரு கோடியே 15 லட்சம்

மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டது. இந்த நிலையில், சனிக்கிழமை இரவு பெய்த தொடர் மழையால் குளத்தைச் சுற்றியிருந்த தடுப்புச் சுவர் இடிந்து விழுந்து, சாக்கடையில் வந்த மழைநீர் குளத்தில் பாய்ந்தது. இதனால், குளம் நிரம்பியது.

**<u>விவசாயிகள் சந்திப்புக் கூட்டம்</u>**

சேலம் மாவட்டத்தில் கொளத்தூர், மேச்சேரி பகுதியில் விவசாயிகள் சந்திப்புக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மேட்டூர் அணை நீரை நீரேற்றுத் திட்டம் மூலம் மேட்டூர் தொகுதிக்குள்பட்ட நீர் நிலைகளை நிரப்பக் கோரி, அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நவம்பர் 16-ஆம் தேதி மேட்டூர் அணைப் பூங்கா எதிரே ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளாக விவசாயிகளை பங்கேற்கும் வகையில் கிராமங்கள் தோறும் விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சியும், விழிப்புணர்வு பிரசாரமும் நடைபெற்று வருகிறது. இதுதொடர்பாக ஞாயிற்றுக்கிழமை கொளத்தூர், கோனூர், மேச்சேரி ஒன்றியத்தில் விவசாயிகள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் பேசியது: மேட்டூர் அணையால் 11 காவிரி டெல்டா மாவட்டங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆனால், அணை உள்ள மேட்டூர் தொகுதியில் 75 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. மேலும், இந்தப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அதனால், நீரேற்றுத் திட்டத்தின் மூலம் மேட்டூர் தொகுதியில் உள்ள நீர் நிலைகளை நிரப்பினால், இந்தப் பகுதி வளம் கொழிக்கும் பூமியாக மாறும். இதேபோல, தோனிமடுவுத் திட்டத்தை நிறைவேற்றினால், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு ஆண்டு முழுவதும் நீர் கிடைக்கும். இந்த இரு திட்டங்களையும் நிறைவேற்ற விவசாயிகள் ஒன்றிணைந்துப் போராடவேண்டும் என்றார் அவர். இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் ராஜப்பன், அய்யண்ணன், ராஜா, அறிவு, மணி ஆகியோர் பேசினர்.

## தீபாவளி: சிறப்பு ஏலத்தில் ரூ.500க்கு ஏலம் போன பூவன்

திருச்சி மாவட்டம், திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தீபாவளி சிறப்பு ஏலத்தில் அதிகபட்சமாக பூவன் தார் ஒன்று ரூ.500க்கு ஏலம் போனது. திருச்செந்துறையிலுள்ள ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. வரும் புதன்கிழமை தீபாவளி பண்டிகையையொட்டி, விவசாயிகளின் வசதிக்காக ஞாயிற்றுக்கிழமை ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தொடரும் மழையை பொருள்படுத்தாது, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறப்பு ஏலத்தில் காட்டுப்புத்தூர், கிளியநல்லூர், குளித்தலை, லால்குடி, கூகூர், போதாவூர், கொடியாலம் போன்ற பகுதிகளிலிருந்து விவசாயிகள் பூவன், ரஸ்தாலி, மொந்தன், பச்சலாடன் உள்ளிட்ட வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் அதிகபட்சமாக பூவன் தார் ஒன்று ரூ.500க்கு ஏலம் போனது, ரஸ்தாலி ரூ.470, மொந்தன் ரூ.465, பச்சலாடன் ரூ.310 என்ற விலைகளில் வாழைத்தார் ஏலம் போனது. இதுவரை நடைபெற்ற ஏலத்திலேயே அதிகபட்சமாக 1040 வாழைத்தார்கள் ரூ.1.98 லட்சத்துக்கு ஏலம் போனதாக வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் சந்திரசேகர் தெரிவித்தார்.

## நாட்டுக்கோழி வளர்க்க இலவச பயிற்சி முகாம்

வரும் 27-ம் தேதி முதல் நாட்டுக்கோழி வளர்க்க இலவச பயிற்சி நடைபெற உள்ளது. இதுகுறித்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மைய இணைப்பேராசிரியர் ந. அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஐஓபி வங்கியின் ஊரக தொழில்முனைவோர் பயிற்சி மையம் சார்பில் நவ.1 வரை நடைபெறும் பயிற்சியில் அறிவியல் ரீதியான பராமரிப்பு முறை, கொட்டகை அமைப்பு, தீவனப் பராமரிப்பு, நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள், தடுக்கும் முறை, மரபுசாரா

மருத்துவ முறைகள், குடற்புழு நீக்கம், தடுப்பூசி அளித்தல், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சியளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சியில் சேர 04324-294335 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

<u>பருத்தி, மக்காச்சோள பயிர்ப் பாதுகாப்புக்கு...</u>

விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பருத்தி, மக்காச்சோளப் பயிர்களில் மழைக் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு குறித்து யோசனை வழங்கியுள்ளார் வேளாண் இணை இயக்குநர் வே. அழகிரிசாமி. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரியில் சாகுபடி செய்துள்ள பருத்தியில் வேரழுகல் நோய், ஆல்டர்நேரியா இலைப்புள்ளி நோய் ஆங்காங்கே தென்படுகிறது. வேரழுகல் நோயைக் கட்டுப்படுத்த தாக்குதலுக்குள்ளான செடிகளைப் பிடுங்கி வயலுக்கு வெளியே அழிக்க வேண்டும். பிறகு பாதிக்கப்பட்ட இடத்திலும், அதைச் சுற்றியுள்ள செடிகளின் வேர்ப் பகுதி நனையும்படி டீரைப்ளா சிஸ்டிரோபின் 10 கிராம் மற்றும் டெபுகோனோசல் 10 கிராம் வீதம் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது கார்பன்டாசிம் 1 கிராம் 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து கரைசலை மண்ணில் ஊற்றவும். ஆல்ட்டர் நேரியா இலைப்புள்ளி வராமல் தடுக்க, பொட்டாசியம் நைட்ரேட் 1 சதக் கரைசலை 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் மற்றும் தத்துப்பூச்சி தாக்குதல் உள்ள வயல்களில் ஹெக்டேருக்கு பிப்ரோனில் 5 எஸ்.சி 1,500- 2,000 மில்லி அல்லது தயோமீத்தாக்சம் 25 டபுள் யுஜி 100 கிராம் அல்லது அசிட்டாமிலிரிட் 20 எஸ்.பி 50 கிராம் அல்லது இமிடாகுளோபிரிட் 200 எஸ்.எல் 100 மில்லி லிட்டர் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மக்காச்சோளப் பயிரில் தண்டு துளைப்பான் காணப்பட்டால்,

கார்போபியூரான் குருணை மருந்து 30 கிலோ ஹெக்டேர் என்ற அளவில் 50 கிலோ மணலுடன் கலந்து குருத்துப் பாகத்தில் இட வேண்டும். அடிச்சாம்பல் நோய் பாதிப்பு ஏற்பட்டால், மெட்டலாக்சில் 10 மாங்கோ செப் ஹெக்டேருக்கு 1 கிலோ வீதம் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைகள் நன்றாக நனையும்படி கைத்தெளிப்பான் மூலம் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

## அக். 23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் அக். 23 (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், ஆட்சியர் தரேஸ் அஹமது தலைமையில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், கடனுதவிகள், இடுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் மற்றும் முறையீடுகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. இக் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய சஙகங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம்.

## நாகை, திருவாரூரில் பலத்த மழை

நாகை, திருவாரூர் மாவட்டங்களில் 3-வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் பலத்த மழை நீடித்தது. நாகை மாவட்டத்தில் அதிகளவாக திருப்பூண்டியில் 14.2 செ.மீ மழை பதிவானது. நாகையில்... நாகை மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பலத்த மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை தீவிரமடைந்த மழை சீற்றம், ஞாயிற்றுக்கிழமை மேலும் தீவிரமானது. ஞாயிற்றுக்கிழமை பகல் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக திருப்பூண்டியில் 142.6 மி.மீ (14.2 செ.மீ) மழை பதிவானது. மாவட்டத்தின் பிற பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்): சீர்காழி - 92,

நாகப்பட்டினம்- 89.7, தலைஞாயிறு- 68.6, ஆணைக்காரன்சத்திரம் (கொள்ளிடம்), மணல்மேடு- 51, மயிலாடுதுறை- 44, வேதாரண்யம்- 26.4, தரங்கம்பாடி- 20.

திருவாரூரில்...

மாவட்டத்தில் சனிக்கிழமை காலையிலிருந்து விட்டுவிட்டு மழை பெய்தது. இந்த மழை நள்ளிரவு வரையும், தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து நாள் முழுவதும் பெய்து கொண்டிருந்தது. திருவாரூர் ரயில்வே கீழ்பாலத்தில் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத வகையில் தண்ணீர் தேங்கி நின்றது. மாவட்டத்தில் அதிகபட்சமாக திருவாரூரில் 45.6 மில்லி மீட்டர் மழையும், பிற இடங்களான பாண்டவையாறு தலைப்பு - 41, திருத்துறைப்பூண்டி - 40.6, நன்னிலம் - 39.2, குடவாசல் - 24.8, முத்துப்பேட்டை - 24, மன்னார்குடி - 23, வலங்கைமான் - 19.1, நீடாமங்கலம் - 19.7 என்ற அளவில் மழைப் பதிவானது.

**<u>வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தேவையான உரங்கள் இருப்பு</u>**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தேவையான அளவு உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்கியதையடுத்து கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்து தேவையான அளவு உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) விஸ்வராம் மேத்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் தற்போது சம்பா சாகுபடி தொடங்க இருப்பதை அடுத்து விவசாயிகளுக்கு தேவையான யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் மாவட்டத்தில் உள்ள

அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு சென்று வாங்கிக் கொள்ளலாம்.

## <u>கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு</u>

கர்நாடகத்தில் சனிக்கிழமை தொடங்கி அடுத்த 72 மணி நேரத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக பெங்களூரு வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து பெங்களூரு வானிலை மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கர்நாடகத்தில் நிலைகொண்டிருந்த தென் மேற்குப் பருவமழை காலம் சனிக்கிழமையுடன் முடிவடைந்தது. ஆனால், வட கிழக்குப் பருவமழை தமிழகம், கேரளம், தெற்கு ஆந்திர மாநிலம், தென் கர்நாடகத்தின் உள்பகுதியில் தொடங்கியுள்ளது. சனிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, கடலோர கர்நாடகம், தென் கர்நாடகம், வட கர்நாடகத்தின் ஒரு சில பகுதிகளில் மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் பெங்களூரு டிஜி ஹள்ளியில் 70 மி.மீட்டர் மழை பதிவானது.

வானிலை முன்னறிவிப்பு

அடுத்த 72 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தில் பரவலாகவும், வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளிலும் பரவலாகவும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் மிதமானது முதல் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம், தென் கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில் மிதமானது முதல் பலத்த மழையும், வட கர்நாடகத்தின் ஒருசில பகுதிகளில்
லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

## பெங்களூருவில் மழை

அடுத்த 24 மணி நேரத்தில் பெங்களூருவில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மட்டும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். பெங்களூருவின் தட்பவெப்பம் அதிகபட்சமாக 28 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்சமாக 20 டிகிரி செல்சியசாகவும் காணப்படும். கடந்த 1-ஆம் தேதி முதல் இதுவரை பெங்களூருவில் 215 மி.மீட்டர் மழை பதிவானது. இது வழக்கத்தைவிட 98 மி.மீட்டர் குறைவாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## மாவட்டத்தில் பரவலாக மழை

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் காலை 8:00 மணி முதல் நேற்று காலை 8:00 மணி வரை பெய்துள்ள மழை அளவு விவரம்: செஞ்சியில் 6 மி.மீ., திருக்கோவிலூர் 5 மி.மீ., திண்டிவனம் 13 மி.மீ., விழுப்புரம் 5 மி.மீ., உளுந்தூர்பேட்டை 3 மி.மீ., வானூர் 9 மி.மீ., சங்கராபுரம் 11 மி.மீ., கள்ளக்குறிச்சி 9:5 மி.மீ., மற்றும் மரக்காணம் 52 மி.மீ., அளவு மழை பெய்துள்ளது.

## நாமக்கல் மாவட்டத்தில் 69.2 மி.மீ., மழை பதிவு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், நேற்று முன்தினம் பெய்த மழையில், 69.2 மி.மீட்டர் பதிவாகி உள்ளது. தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ளதால், சில தினங்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில், காவிரி கரையோரம் மற்றும் கொல்லிமலை பகுதிகளில், சாரல் மழை பெய்து

கொண்டிருந்தது. தொடர் மழையால், குளம், குட்டை, ஏரி உள்ளிட்ட நீராதாரங்களில், நீர்ப்பிடிப்பு அதிகரித்துள்ளது. அதனால், விவசாயிகள் விவசாய பணியை மேற்கொள்ள, ஆயத்தமாகி வருகின்றனர். நேற்று முன்தினம், காலை, 7 மணி முதல், நேற்று காலை, 7 மணி வரை பெய்த மழையில், எருமப்பட்டி, ஐந்து மி.மீ., குமாரபாளையம், 21 மி.மீ., மங்களபுரம், 20 மி.மீ., மோகனூர், ஐந்து மி.மீ., புதுச்சத்திரம், நான்கு மி.மீ., ராசிபுரம், எட்டு மி.மீ., சேந்தமங்கலம், 4.2 மி.மீ., திருச்செங்கோடு, இரண்டு மி.மீ., என, 69.2 மி.மீ., மழை பெய்தது.

**வீரகனூர் மாட்டு சந்தையில் ஆடு, மாடுகள் ரூ.1.50 கோடிக்கு வர்த்தகம்**

தலைவாசல்: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, தலைவாசல் அருகே, வீரகனூரில் நடந்த மாட்டு சந்தையில், ஏராளமான ஆடு, மாடுகள் விற்பனைக்கு வந்தது. இவற்றின் மூலம், ரூ. 1.50 கோடிக்கு வர்த்தகம் நடந்தது. தீபாவளி பண்டிகையொட்டி நடந்த சந்தை என்பதால், தலச்சேரி, போயர், சேலம் கறுப்பு, மேச்சேரி, வெள்ளை, கறுப்பு ரக ஆடுகள், செம்மறி ஆடு மற்றும் கறவை, காளை மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. 15 முதல் 20 கிலோ எடையுள்ள ஆடுகள், தலா 4,000 ரூபாய் வரை விற்பனையானது. சாத்தப்பாடி கிராமத்தை சேர்ந்த, ராமன் என்பவரது, 70 கிலோ எடையுள்ள, தலச்சேரி ரக வெள்ளாடு, 14 ஆயிரம் ரூபாய்க்கும், தென்பொன்பரப்பி கருப்பண்ணனின், 50 கிலோ எடையுள்ள தலச்சேரி ஆடு 13 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது. சந்தையில், 3,000க்கும் மேற்பட்ட ஆடுகள், 2,000க்கும் மேற்பட்ட மாடுகள் என, மொத்தம், 1.50 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையானது. சேலம், விழுப்புரம், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கூறியதாவது: தீபாவளி பண்டிகைக்காக, அதிகளவில் இறைச்சிக்காக வெட்டப்படும் என்பதால், ஆடுகளை விற்க வந்துள்ளோம். ஆடுகள் அதிகளவில் வந்ததபோதும்,

விலை அதிகமாக உள்ளது. கேரளா உள்ளிட்ட வெளி மாநில வியாபாரிகளும், இறைச்சி கடை வைத்துள்ளவர்களும், கூடுதல் விலை கொடுத்து வாங்கிச் சென்றனர். புரட்டாசி மாதம் முடிந்து விட்டதால், 8 கிலோ ஆடு, 3,000 ரூபாய்க்கு விற்பனையானது. ஆடுகளுக்கு, தலா 5 முதல், 10 ரூபாயும், மாடுகளுக்கு தலா 10 முதல், 20 ரூபாய் வரை, மாட்டு சந்தையில் சுங்க வசூல் செய்ய வேண்டும். ஆனால், ஆடு தலா 20, 25 ரூபாயும், மாடு, தலா 100 ரூபாய் என, கூடுதல் கட்டணம் வசூலிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**சேலம், நாமக்கல் மாவட்ட விவசாயத்துக்கான உரம்: ரயில் மூலம் வரவழைப்பு**

சேலம்: சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட விவசாயத்துக்கு தேவையான, 2,600 மெட்ரிக் டன் உரம், சென்னை துறைமுகத்தில் இருந்து, நேற்று முன்தினம், சேலம் கொண்டு வரப்பட்டது. சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில், ஆங்காங்கு தற்போது மழை பெய்து வருவதால், விவசாயிகள், தங்களுடைய விளை நிலங்களில், விவசாய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்கள், தங்களுடைய பயிர்களுக்கு, எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதற்காக, உரங்களை இடுவது வழக்கம். இவர்களுடைய உரத்தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, இந்தியன் பொட்டாஷ் நிறுவனத்தின் யூரியா, 1,300 மெட்ரிக் டன் மற்றும் பொட்டாஷ், 1,300 மெட்ரிக் டன் என மொத்தம், 2,600 மெட்ரிக் டன் உர மூட்டைகள், சென்னை துறைமுகத்தில் இருந்து, நேற்று முன்தினம், சரக்கு ரயில் மூலம், சேலம் செவ்வாய்பேட்டைக்கு, 42 வேகன்களில் கொண்டு வரப்பட்டது. இந்த உர மூட்டைகள், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மீதம் உள்ள உரம், டான்பெட் கிடங்கில், பொட்டாஷ், 250 மெட்ரிக் டன்னும், யூரியா, 100 மெட்ரிக் டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

உரம் தேவைப்படும் விவசாயிகள், தமிழ்நாடு கூட்டுறவு இணையதளம் மூலம்க தேவையான உரங்களை பெற்றுக் கொள்ளலாம். எனவே, விசாயிகள், தங்களுக்கு தேவையான உரங்களை பெற்று பயணடையுமாறு, சேலம் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>திருச்செங்கோட்டில் ரூ.70 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்</u>**

திருச்செங்கோடு: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 70 லட்சம் ரூபாய்க்கு, மஞ்சள் ஏலம் நடந்தது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்முடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மஞ்சள் விற்பனைக்கு வந்தது. நேற்று நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 8,150, குறைந்தபட்சமாக, 5,549 ரூபாய், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 6,389, குறைந்தபட்சமாக, 4,798 ரூபாய்க்கு ஏலம் போனது. பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 11,809, குறைந்தபட்சமாக, 8,500 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 1,800 மூட்டை மஞ்சள் விற்பனை ஆனதில், 70 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**<u>மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு</u>**

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வார நாட்களில் மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளின், ஏலம் நடந்து வருகிறது. இந்த ஏலத்துக்கு, வெளி மாவட்டம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் விளைவித்த மஞ்சள், பருத்தியை

கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, மழையால் மஞ்சள் மூட்டை வரத்து குறைந்து, 28 மூட்டை மஞ்சளை விவசாயிகள் கொண்டு வந்தனர். அதனால், கூட்டுறவு சங்க அலுவலர், மஞ்சள் ஏலத்தை ஒத்திவைத்தார்.

**பால் உற்பத்தியாளர்களுக்கு தீபாவளிக்கு கூடுதல் தொகை**

விழுப்புரம்: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விழுப்புரம் ஒன்றிய பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் தொகை வழங்கப்பட்டுள்ளது. விழுப்புரம் - கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் இரு மாவட்டங்களில் 753 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்து நாள்தோறும் 1 லட்சத்து62 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் மூலம் இரு மாவட்ட நுகர்வோர் தேவைக்கு 23 ஆயிரம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. செங்கல்பட்டு மறைமலை நகர், கல்பாக்கத்திற்கு 18 ஆயிரத்து 500 லிட்டர் பால் தினசரி அனுப்பப்படுகிறது. மீதமுள்ள 1 லட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால் சென்னைக்கு அனுப்பப்படுகிறது. தீபாவளி பண்டிகையை யொட்டி விழுப்புரம் ஆவின் ஒன்றியம் கடந்த 1ம் தேதி முதல் 10ம் தேதி வரை பத்து நாள் தொகை 345 லட்சம் ரூபாய் பால் பணம் பட்டுவாடா வழங்கி யுள்ளது. இதன் மூலம் ஒன்றியத்தில் பால் ஊற்றும் 39 ஆயிரத்து 203 உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர். உற் பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கடந்த பிப்., மார்ச் மாதங்களுக்கு உறுப்பினர்களுக்கு கூடுதல் கொள்முதல் விலையாக சங்கங்கள் ஒன்றியத்திற்கு வழங்கிய பாலுக்கு சத்து 12 சதவீதம் மேல் உள்ளதற்கு லிட்டர் ஒன்றுக்கு 0.60 பைசா வீதம், கீழுள்ளதற்கு லிட்டர் 0.50 பைசா வீதம் கணக்கிட்டு கடந்த 15ம் தேதி உற்பத்தியாளர்களுக்கு 42 லட்சத்து 94 ஆயிரத்து 880 ரூபாய் ஒன்றியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை ஆவின் தலைவர் விஜயக்குமார், துணை தலைவர் செல்வராஜ் மற்றும் இயக்குனர்கள்

தெரிவித்துள்ளனர்.

**<u>சாகுபடி பரப்பு குறைவால் நிலக்கடலை விலை உயர்வு</u>**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்தாண்டை விட இந்தாண்டு, நிலக்கடலை சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்துள்ளதால், நிலக்கடலை விலை அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பேரிகை, ராயக்கோட்டை, சூளகிரி, வேப்பனப்பள்ளி, பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, சந்தூர் ஆகிய பகுதிகளில், ஆண்டுதோறும் சுழற்சி முறையில், 30 ஆயிரம் ஹெக்டரில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால், மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை அதிகளவு பாதிக்கப்பட்டது. கிணற்று பாசனத்தை நம்பி சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை மட்டும் வளர்ச்சியடைந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது அனைத்து பகுதிகளிலும் நிலக்கடலை அறுவடை சீஸன் துவங்கியுள்ளது. மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நிலக்கடலை கிருஷ்ணகிரி மார்க்கெட்டில், ஒரு வாரமாக விற்பனை செய்யப்படுகிறது. நிலக்கடலையை பொள்ளாச்சி, ஈரோடு, மதுரை, திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். மார்க்கெட்டுக்கு, நிலக்கடலை வரத்து குறைந்துள்ள நிலையில், வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகின்றனர். கடந்தாண்டு, 60 கிலோ அளவு கொண்ட, ஒரு மூட்டை நிலக்கடலை, 900 முதல் 1,000 ரூபாய் வரை விற்பனையானது. இந்தாண்டு ஒரு மூட்டை 1,500 முதல் 1,600 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி, பழையபேட்டையை சேர்ந்த நிலக்கடலை மொத்த வியாபாரி சத்தியமூர்த்தி கூறியதாவது: கடந்தாண்டு, ஒரு ஏக்கரில், 20 மூட்டை நிலக்கடலை விளைந்தது. இந்தாண்டு ஐந்து மூட்டை நிலக்கடலை மட்டுமே விளைந்துள்ளது. இதன் காரணமாக கிருஷ்ணகிரி மார்க்கெட்டுக்கு நிலக்கடலை வரத்து குறைந்துள்ளது. வரத்து

குறைவால் கடும் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்தாண்டு, கிருஷ்ணகிரி மார்க்கெட்டில் நாள் ஒன்றுக்கு, 50 டன் நிலக்கடலை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், இந்தாண்டு வரத்து குறைந்துள்ளதால் தினமும், ஒரு டன் நிலக்கடலை மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஜனவரியில் புதிய வரத்து அரிசி விலை குறைய வாய்ப்பு**

ஈரோடு: தை மாதத்தில் அறுவடை முடிந்து, புதிய அரிசி விற்பனைக்கு வர உள்ளதால், சந்தையில் அரிசி விலை குறைய துவங்கி உள்ளது. தமிழகம் முழுவதும், 12,000 அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன. ஈரோடு மாவட்டத்தில் மொத்தமுள்ள, 250 ஆலைகளில், காங்கேயத்தில் மட்டும், 120க்கும் மேற்பட்ட ஆலைகள் உள்ளன. அரிசி ஆலைக்கான குறியீட்டை தற்போதுள்ள, ஆரஞ்சில் இருந்து மீண்டும் பச்சை இலக்குக்கு மாற்ற வேண்டும். அரிசியை மதிப்புக்கூட்டத்தக்க பொருளாக மாற்றி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என, அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம், வலியுறுத்தி வருகிறது. இதுகுறித்து, காங்கேயம் தாலுகா அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் பழனிசாமி கூறியதாவது: டீலக்ஸ் பொன்னி, டி.பி.டி., பொன்னி, அதிசய பொன்னி, ஐ.ஆர்., 20, ஏ.டி.பி., 45, இட்லி அரிசி உள்ளிட்ட ரகங்கள் விற்பனைக்கு வருகின்றன. தற்போது பயிரிடப்பட்டுள்ள நெல் ரகங்கள், அறுவடையாகி தை மாதத்தில் விற்பனைக்கு வரும் என்பதால், அரிசி விலை குறையத்துவங்கி உள்ளது. வெள்ளை பொன்னி, தற்போது, மொத்த விலையில் கிலோ, 33 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 61 கிலோ மூட்டை பி.பி.டி. ரக அரிசி மூட்டைக்கு, 100 ரூபாய் வரை குறைந்துள்ளது. அதேபோல், கர்நாடகாவில் இருந்து விற்பனைக்கு வரும், கர்நாடகா சோனா அரிசி கிலோவுக்கு, ஒரு ரூபாய் வரை குறைந்துள்ளது. அடுத்த, இரண்டு மாதத்தில் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர்

கூறினார்.

**அணைப்பாளையத்தில் அதிக மழை பதிவு**

**கரூர்: கரூர் மாவட்டத்தில் அதிக அளவாக அணைப்பாளையத்தில்**, 18.20 மி.மீ., மழைப் பதிவாகியுள்ளது. கரூரில், 6.50 மி.மீ., அரவக்குறிச்சியில். 5.60, க.பரமத்தியில். 0.80, மாயனூரில். 11, அணைப்பாளையத்தில், 18.20, தோகமலையில், 2, பஞ்சப்பட்டியில், 16.20, பாலவிடுதியில், 15.40, கடவூரில், 5, கிருஷ்ணராயபுரத்தில், 7, மயிலம்பட்டியில், 9.50 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டத்தில், நேற்று காலை நிலவரப்படி மொத்தம், 97.20 மி.மீ., மழைப்பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் சராசரியாக, 8.10 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**தட்டியெடுத்த மழையால் நிரம்பிய நீர்நிலைகள்; குன்னூர் மக்களுக்கு கொஞ்சம் நிம்மதி**

ஊட்டி : நீலகிரியில், பரவலாக மழை பெய்து வருகிறது; பருவ மழை துவங்குவதற்கு முன்பே, குன்னூரில் தட்டியெடுத்த மழையால், நீராதாரங்கள் நிரம்பி, மக்களை திருப்திப்படுத்தி உள்ளன. நீலகிரி மாவட்டத்தில், பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழகத்தில், தென் மேற்கு பருவமழையின் தாக்கம் ஊட்டி, குன்னூரில் பரவலாக தென்பட்டது. குறிப்பாக, குன்னூரில், கடந்த 3, 4 ஆண்டுகளுக்கு பின், பருவமழை கொட்டி தீர்த்தது. பொதுவாக, அக்டோபர், நவம்பரில் துவங்கும் வட கிழக்கு பருவ மழையின் பாதிப்பு தான், குன்னூரில் அதிகமாக இருக்கும் என்ற நிலையில், வட கிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பே, குன்னூரில் தட்டியெடுத்த மழையால் நகரின் முக்கிய அணையான ரேலியா மற்றும் பந்துமி அணைகள் நிரம்பின. நேற்று முன்தினம் மட்டும், குன்னூரில் 9 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. தவிர, நீர் பிடிப்புப் பகுதியான அப்பர் பவானியில் 4.5 செ.மீ.,

கெத்தையில் 5 செ.மீ., என, மழை பதிவாகியுள்ளது. ஊட்டியை பொறுத்தவரை, நேற்று காலை துவங்கி பரவலாக மழை பெய்தது; இதனால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழையால், குளிர் நிலவுகிறது; இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. மழையால், ஊட்டியில் உள்ள பார்சன்ஸ்வேலி உட்பட நீராதார அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. வருகின்றன.

**கட்டுப்பாட்டு அறைகள் "அலர்ட்'** : மாவட்ட கலெக்டர் அலுவலகம் உட்பட ஆர்.டி.ஓ., தாசில்தார் அலுவலகங்களில், கட்டுப்பாட்டு அறைகள் திறக்கப்பட்டு, வருவாய் துறை, நெடுஞ்சாலை மற்றும் தீயணைப்புத் துறையினர் என, அணைத்து துறை அதிகாரிகளும், பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளனர்.

<u>105 எக்@டர் துவரை நடவு வேளாண்துறை இலக்கு</u>

பழநி : பழநி வேளாண்உதவி இயக்குனர் சாந்தாமணி கூறியுள்ளதாவது: பழநிபகுதியில் தகுதியுள்ள விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒரு எக்@டர் சொட்டுநீர்பாசன முறையில் சாகுபடிக்கு தேவையான விதைகள் மற்றும் உரங்கள், இதர இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டு பழநிபகுதியில் 105 எக்டர் அளவில் துவரை நடவு செய்ய திட்டமுள்ளது. இதில், ஒரு எக்@டருக்கு 1,250 கிலோ வரை உற்பத்திசெய்து, துவரைபருப்பை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகம் மூலமாக கொள்முதல் செய்திடவும் வழிவகைசெய்துதரப்படும். தகுதியுள்ள பழநிபகுதிவிவசாயிகள் வேளாண் உதவி அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**காபியில் தண்டு துளைப்பான் கட்டுப்படுத்த பயிற்சி முகாம்**

தாண்டிக்குடி : தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலையம் மற்றும் விரிவாக்க மையம் இணைந்து காபியில் வெள்ளைத் தண்டு துளைப்பான் கட்டுப் படுத்தும் ஆலோசனை முகாமை புல்லாவெளியில் நடத்தினர். தாண்டிக்குடி மண்டல காபி ஆராய்ச்சி நிலைய துணை இயக்குனர் அணில்குமார் வரவேற்றார். காபி வாரிய விரிவாக்கம் துணை இயக்குனர் ஐயப்பன் முன்னிலை வகித்தார். முன்னோடி விவசாயிகள் நாகராஜன், சேகர் நாகராஜன் தலைமை வகித்தனர. வத்தலக்குண்டு, போடி காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலர்கள் சக்திவேல், ஸ்ரீதேவி கலந்து கொண்டனர். கர்நாடாகா, ஏற்காடு பகுதியில் வெள்ளைத் தண்டு துளைப்பான் தாக்குதல் அதிகரித்து காபி விளைச்சல் பாதித்துள்ளது. கீழ்பழநிமலைப் பகுதியில் இதன் தாக்குதல் குறைவு என்ற போதிலும் கடந்த மூன்றாண்டுகளாக நீடித்த வறட்சியால் பாதிக்க வாய்ப்புள்ளது. விவசாயிகள் வெள்ளைத் தண்டுத்துளைப்பான் பாதித்த செடிகளை கண்டறிந்து வேரோடு அப்புறப்படுத்த வேண்டும். நல்ல நிலையிலுள்ள இதர காபி செடிகளை நோய் தாக்குதலிலிருந்து பாதுகாக்க சாக்கு போர்த்துதல், இனக்கவர்ச்சி பொறி வைத்து வண்டுகளை அழித்தல், காபி செடிகளில் வளுவளுப்பை ஏற்படுத்துதல், பூச்சி கொல்லி மருந்து தெளித்தல் போன்றவற்றை கடைபிடிக்க வேண்டுமென அதிகாரிகள் ஆலோசனை அளித்தனர்.

**கொடைக்கானலில் தொடர் மழை; அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

கொடைக்கானல் : கொடைக்கானலில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்துவருகிறது. கொடைக் கானலில் கடந்த அக். 18ல் மிதமான மழை பெய்தது. இது அப்சர்வேட்டரியில் 8.5 மி.மீ., ஆகவும், போட்கிளப்பில் 10.6 மி.மீ., ஆகவும் பதிவானது.நேற்று காலை முதல் மிதமான மழை விட்டுவிட்டு பெய்தது. மதியம் 3 மணிக்கு பலத்த மழை பெய்தது. நேற்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையிலான 8 மணி நேரத்தில் 35.5

மி.மீ., மழை போட்கிளப்பில் பதிவானது. கொடைக்கானல் ஏரி தொடர்ந்து 20வது நாளாக நிரம்பி வழிகிறது.கொடைக்கானல் நகராட்சி நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் நேற்று 16 அடியாக உயர்ந்தது(மொத்தம் 18 அடி). மனோரத்தினம் சோலை அணையில் நீர்மட்டம் 28.5 அடியாக இருந்தது. (மொத்தம் 36 அடி) மழை தொடர்ந்தால் 2 அணைகளும் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடைசியாக 4 ஆண்டுகளுக்கு முன்பு அணைகள் நிரம்பின. மழையால் சுற்றுலா பயணிகளின் வருகை நேற்று குறைவாக இருந்தது. வெள்ளி நீர்வீழ்ச்சி உள்ளிட்ட சில இடங்களை மட்டும் மழையில் நனைந்தவாறே சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். கொடைக்கானலில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை 14 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 7 டிகிரி செல்சியசாகவும் இருந்தது. காற்றின் வேகம் 2 கி.மீ., ஆகவும், காற்றில் நிலவிய ஈரப்பதம் 98 சதவீதமாகவும் இருந்தது.

**<u>பருவமழை துவக்கம்; உரத்தட்டுப்பாடு இல்லை; இணை இயக்குனர் தகவல்</u>**

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் போதுமான உரங்கள், ஈடுபொருட்கள் கையிருப்பு உள்ளதாக வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "வேளாண் பயிர்களின் விதைகள், இடுபொருட்கள், உரங்கள், கலப்பு உரங்கள் ஆகியவைகளின் கையிருப்புகளின் விபரங்கள் குறித்த ஆய்வு கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. தனியார் உர நிறுவனங்கள் மற்றும் வேளாண் அதிகாரிகள், இணை, துணை இயக்குனர்கள் பங்கேற்றனர். கையிருப்பு நிலவரங்கள் குறித்து விபரங்கள், வேளாண் உற்பத்தி ஆணையருக்கு அனுப்ப தயார் செய்யப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் போதுமான அளவு உரங்கள் கையிருப்புக்கள் உள்ளன. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கலப்பு உரங்கள், யூரியா 1300 டன் உள்ளது.

அதனை தவிர்த்து, "மெட்ராஸ் பெர்ட்டிலைசர் லிமிடெட்' கம்பெனியில் 1000 டன், ஆர்.சி.எப். நிறுவனத்திலிருந்து யூரியா 1000 டன், காம்ப்ளக்ஸ் 500 டன், வர இருக்கிறது. ஐ.எப்.சி. நிறுவனத்திலிருந்து யூரியா 1000 டன், காம்ப்ளக்ஸ் 400 டன், டி.ஏ.பி. 850 டன், வர இருக்கிறது. சேலத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, விதை மாற்றம் செய்த உளுந்துப்பயறு வகைகள் 4 டன், வேளாண் உற்பத்திமையங்களில் கையிருப்பு உள்ளன.' என்றார்.

**<u>மாவட்டத்தில் நான்காவது நாளாக மழை தொடர்கிறது! அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 93.2 மி.மீ.,</u>**

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து நான்காவது நாளாக தொடர் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 93.2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. தொடர் மழையால் கிராமப்புறங்களில் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் நிலை உள்ளது. விவசாயிகளும் மகிழ்ச்சியில் தங்கள் பணிகளை விரைவுபடுத்தியுள்ளனர். ராமநாதபுரம் நகரில் பல இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. சில இடங்களில் ரோடுகளில் அரிப்பு ஏற்பட்டு குண்டும், குழியுமாக காணப்படுகிறது. வாலாந்தரவை, பெருங்குளம், குயவன்குடி, கோட்டைமேடு, அச்சுந்தன்வயல், சத்திரக்குடியில் வயல்வெளிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. போலீஸ் கவாத்து மைதானத்தில் வடிகால் வசதியில்லாததால் குளம் போல் மழைநீர் தேங்கியுள்ளது. ராமேஸ்வரம்: ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதியில் தொடர்ந்து சூறாவளி காற்றுடன் மழை பெய்து வருகிறது. தங்கச்சிமடம் விக்டோரியா நகர், பாம்பன் தெற்குவாடி, மண்டபம் கோயில்வாடியில் மீனவர்களின் குடிசை வீடுகளை சுற்றி மழை நீர் தேங்கியுள்ளது. தொடர் மழையினால் பொதுமக்கள் வீடுகளில் வெளியேற முடியாத நிலையில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. தொடர் மழையால், கடந்த இரண்டு ஆண்டுகளை போல இந்த ஆண்டு மழை ஏமாற்றாது என்ற நம்பிக்கை விவசாயிகளிடம்

ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாய பணிகளில் மும்முரமாக ஈடுபடத்துவங்கியுள்ளனர். கிராமப்புறங்களில் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் வகையில் உள்ளது. வடகிழக்கு பருவமழை முழுமையாக பெய்யும்பட்சத்தில் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கி நிலத்தடிநீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.நேற்று மாவட்டத்தில் மொத்தம் 646.30 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 40.39 மி.மீட்டர் பதிவாகியது.

மழை விபரம்(மி.மீ.,)

ராமநாதபுரம் 93.2

தொண்டி 66.5

தீர்த்தாண்டதானம் 66

ஆர்.எஸ்.மங்கலம் 65

வட்டாணம் 65

கடலாடி 57.1

வாலிநோக்கம் 45.8

திருவாடானை 36

பள்ளமோர்குளம் 32

பரமக்குடி 24.2

முதுகுளத்தூர் 20

தங்கச்சிமடம் 20

ராமேஸ்வரம் 15.2

மண்டபம் 14.6

கமுதி 14.6

பாம்பன் 10.9

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூருக்கு நீர்வரத்து உயர்வு



மேட்டூர் : காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 6860 கனஅடி என இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 9,023 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையில் இருந்து டெல்டா மற்றும் கிழக்கு &மேற்கு கால்வாய் பாசனத்திற்காக விநாடிக்கு 1916 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. டெல்டா மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், பாசனத்திற்கான தண்ணீர் தேவை குறைந்துள்ளது. இதனால், நேற்று முன்தினம் முதல் டெல்டா பாசனத்திற்கு 1000 கனஅடி வீதம் மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 87.95 அடியாகவும், நீர்இருப்பு 50.33 டிஎம்சியாகவும் இருந்தது. இதனிடையே தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கி உள்ளது. இதனால் மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், நீர்திறப்பு குறைக்கப்பட்டுள்ளதால் நீர் மட்டம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தர்மபுரியில் கொய்யா விற்பனை அதிகரிப்பு

தர்மபுரி, : தர்மபுரி நகரில் கொய்யா விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். தர்மபுரி மாவட்டத்தில் கடத்தூர், அரூர்,

பொம்மிடி, பாப்பிரெட்டிபட்டி பகுதிகளில் கொய்யா விளைவிக்கப் படுகிறது. இந்த கொய்யாக்கள் தர்மபுரி நகரில் கிலோ ரூ60க்கு விற்பனை செய்யப்படுகிறது. கொய்யா விற்பனை கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது. இதுபற்றி சந்தை பேட்டை மார்க்கெட் அருகே கொய்யா வியாபாரி மாது கூறுகையில், பொம்மி, பாப்பிரெட்டிபட்டி, கடத்தூர் பகுதியில் இருந்து தினமும் ஒரு டன் கொய்யா தர்மபுரி நகருக்கு விற்பனைக்கு வருகிறது. தற்போது சீசன் என்பதால் தினமும் 5 டன் வரை விற்பனைக்கு வருகிறது. கடத்தூர் பகுதி கொய்யாவுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், தினமும் நான் 25- முதல் 40 கிலோ வரை கொய்யாக்களை விற்பனை செய்கிறேன். பெரும்பாலும் கொய்யாவை காயாகவே வாங்கி சாப்பிடுவதையே மக்கள் விரும்புகின்றனர் என்றார்.

**<u>கன மழை எதிரொலி பூண்டி ஏரி நீர்மட்டம் உயர்வு</u>**

சென்னை, : பூண்டி ஏரி பகுதியில் கனமழை பெய்து வருவதால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. சென்னை மக்களின் தாகம் தீர்ப்பதற்காக கண்டலேறு அணையில் இருந்து கடந்த 13ம் தேதி மீண்டும் தமிழகத்துக்கு கிருஷ்ணா நீர் திறக்கப்பட்டது. இது, கடந்த 17ம்தேதி மாலை 4 மணிக்கு தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாய்ன்ட்டை வந்தடைந்தது. மறுநாள் பூண்டி ஏரியை அடைந்தது. ஆரம்பரத்தில் ஜீரோ பாய்ன்ட்டுக்கு 50 கன அடியாக வந்த தண்ணீர், நேற்று முன்தினம் (18ம் தேதி) 117 கன அடியாகவும், நேற்று 129 கன அடியாகவும் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. கடந்த 2 தினங்களாக இப்பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் பூண்டி ஏரியின் நீர்மட் டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. பூண்டி ஏரிக்கு கிருஷ்ணாநீர் 145 கன அடியும், மழைநீர் 722 கன அடியும் வந்துகொண்டிருக்கிறது. பூண்டி ஏரியில் கடந்த 17ம் தேதி 18 அடியாக இருந்த தண்ணீர் தற்போது 19.20 அடியாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு 123 கன அடியும், சுத்திகரிப்புக்காக 10 கன அடியும் வெளியேற்றப்படுகிறது. பூண்டி ஏரி பகுதியில் 36.6 மிமீ மழை பெய்துள்ளதால் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழகத்தில் தீவிரமடையும் வடகிழக்கு பருவமழை பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**



சென்னை, வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், தமிழகத்தில் மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

தமிழ்நாட்டின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வடகிழக்கு பருவமழை கடந்த 17–ந்தேதி தொடங்கியது. இதையடுத்து சென்னை உள்பட தமிழகம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்தநிலையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், தமிழகத்தில் தொடர்ந்து மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

<u>கனமழைக்கு வாய்ப்பு</u>

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தமிழகம் மற்றும் இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் உருவான

காற்றழுத்த தாழ்வுநிலை தொடர்ந்து அதே இடத்தில் நீடித்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களில் கனமழையையும், சில இடங்களில் மிக கனமழையையும் எதிர்ப்பார்க்கலாம். சென்னையை பொறுத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் பெரும்பாலான இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் 12 செ.மீட்டர் மழையும், நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் 11 செ.மீட்டர் மழையும், பாபநாசத்தில் 10 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது.

கன்னியாகுமரி, திருச்செந்தூர்...

சென்னை அண்ணா பல்கலைக்கழகம், ராமநாதபுரம், நாகப்பட்டினம், சீர்காழி, குன்னூர், கேளம்பாக்கம், எண்ணூர், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் தலா 9 செ.மீட்டர் மழையும், மைலாடி, சென்னை விமானநிலையம், அம்பாசமுத்திரம், கடலூர், சிதம்பரம், தூத்துக்குடி, தொண்டி, ஆர்.எஸ்.மங்களம், பூந்தமல்லி, புழல் ஆகிய இடங்களில் தலா 7 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. தூத்துக்குடி துறைமுகம், மணிமுத்தாறு, கடலாடி, இளையாங்குடி, போச்சம்பள்ளி, பரங்கிப்பேட்டை, கோவை பீளமேடு, காட்டுகுப்பம், மகாபலிபுரம், செம்பரம்பாக்கம், சென்னை டி.ஜி.பி.அலுவலகம் ஆகிய இடங்களில் தலா 6 செ.மீட்டர் மழை பெய்துள்ளது.

பரவலாக மழை

தக்கலை, குழித்துறை, நாங்குநேரி, சாத்தான்குளம், ஒட்டப்பிடாரம், வல்லம், திருவாரூர், மரக்காணம், சேத்தியாதோப்பு, சோழவரம்,

மாதவரம், செங்குன்றம், வடசென்னை ஆகிய இடங்களில் தலா 5 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

‘புயலாக’ மாறுமா?

குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி ‘புயலாக’ மாறுமா? என்று வானிலை ஆய்வு மையம் இயக்குனர் எஸ்.பாலச்சந்தரிடம் கேட்டதற்கு, இதுவரை புயலாக மாறுவதற்கான சூழ்நிலை தென்படவில்லை’ என்றார்.

**வியக்கவைக்கும் ‘தேயிலை’ உலகம்: ஒரு கிலோ டீத்தூள் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய்**



உலகிலேயே ‘காஸ்ட்லி’யான டீத்தூளின் விலை எவ்வளவு தெரியுமா? ஒரு கிலோ ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாய். அதுவும் நம் நாட்டில்தான் இந்த டீத்தூள் தயாரிக்கப்படுகிறது. மேற்கு வங்க மாநிலம் டார்ஜீலிங்கில் உள்ள மகாய்பாரி தேயிலை எஸ்டேட்தான் உலகிலேயே விலை உயர்ந்த டீத்தூளின் பிறப்பிடம். அப்படியென்ன அந்த டீத்தூளில் விசேஷம் என்கிறீர்களா? மயங்க வைக்கும் மணம், நாக்கில் நிலைக்கும் ருசிதான். ஆனால் நீங்கள் ஒரே ஒரு முறை ருசித்துப் பார்க்க விரும்பினாலும் இது கிடைப்பது கஷ்டம். காரணம், இந்த டீத்தூள் கடைகளுக்கு வருவதில்லை. 90 சதவீதம், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது. இந்த டீ எஸ்டேட்டின் தலைவரான ராஜா பானர்ஜி, ‘‘நீங்கள் இந்த மிகச் சிறந்த டீயை ருசிக்க வேண்டுமென்றால், இணையதளம் மூலமாகத்தான் முயற்சிக்க வேண்டும். காரணம், நாங்கள் இந்தியாவில் எங்குமே இந்த டீயை விற்பனை செய்வதில்லை’’ என்கிறார் சாதாரணமாக. மகாய்பாரி தேயிலை எஸ்டேட் 1600 ஏக்கர்களுக்கு பரந்து விரிந்திருந்தாலும், இங்கு மூன்றில் ஒரு பங்கு

இடத்தில்தான் தேயிலை விளைவிக்கப்படுகிறது. மீதமுள்ள பரப்பு முழுவதும் காடுதான். இந்த தேயிலை எஸ்டேட்டில் நான்கு வகை டீத்தூள்கள் தயாரிக்கப்படுகின்றன. அவை: பிளாக், ஊலாங், கிரீன் மற்றும் ஒயிட், சில்வர் டிப்ஸ் இம்பீரியல். இதில் நான்காம் வகை டீத்தூள்தான் இங்கு தயாரிக்கப்படுபவற்றிலேயே விலை உயர்ந்தது. ரோஜா மணமூட்டிய இந்த டீத்தூள், 80 டிகிரி செல்சியசில் கொதிக்கும் நீரில் இட்டதுமே அழகிய பொன்னிறம் படர்கிறது, அற்புதமான மணம் நாசியை வருடுகிறது. பொதுவாக நாம் சூடாகத்தான் டீ பருக விரும்புவோம். ஆனால் டார்ஜீலிங் டீயை ஆறிய பிறகுதான் ருசிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்கள். இயல்பான அறை வெப்பநிலைக்கு டீ வந்ததும், அதை சத்தமாக ‘மடக்’கென்று குடிக்கும்போதுதான் முழு ருசியை உணர முடியுமாம். தமிழகத்தின் நீலகிரி உள்பட உலகின் பல்வேறு பகுதிகளில் தேயிலை விளைவிக்கப் படுகிறது. ஆனால் டார்ஜீலிங் டீயின் அதிருசிக்கு காரணம் என்ன என்று கேட்டால், இங்கு அவ்வப்போது சீராகப் பொழியும் மழை, மிகவும் குளிர்ந்த சூழல், தண்ணீர் தேங்காமல் ஓடிப் போகும் நில அமைப்பு, இயற்கை விவசாய முறை என பல காரணங்களைக் கூறுகிறார்கள். அதோடு, தேயிலையை நள்ளிரவில் பறிப்பதும் அடங்கும். இளம் இலையாகப் பறிக்கப்படுவது முதல், நமது கையில் ஆவி பறக்கும் டீயாக மாறுவது வரை தேயிலையின் பயணம் அபூர்வமானது. அதிலும், உலகின் விலை உயர்ந்த மகாய்பாரி டீத்தூள் தயாரிப்பில் ரொம்பவே துல்லியம் தேவைப்படுகிறது. தேயிலையை பதப்படுத்துவதில் அதன் ஈரப்பதத்தை நீக்குவது முக்கியமானது. பறித்த தேயிலை, பதப்படுத்தும் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் சில மணி நேரத்துக்கு குளிர்ந்த காற்று படும்படி வைக்கப்படுகிறது. இது அந்தத் தேயிலைகள் புளித்துப் போவதைத் தடுக்கிறது. பின்னர் அந்தத் தேயிலைகள் 37.7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 18 மணி

நேரத்துக்கு மேல் உலர வைக்கப்படுகின்றன. அப்போதும் 62 சதவீத ஈரப்பதம்தான் அகன்றிருக்கும். எஞ்சியிருக்கும் ஈரப்பதம், ‘ரோலிங்’கின் போது தேயிலை செல்கள் உடைவதற்கு உதவுகிறது. அரைக்கப்படும் தேயிலை, தேயிலைச் சாறு கொண்டே ‘கோட்டிங்’ செய்யப் படுகிறது. இந்த செயலாக்கத்தின் போதுதான் தேயிலைக்கு மணமும், நிறமும் கிடைக்கிறது. நன்கு காய்ந்த, நல்ல மணமுள்ள தேயிலைத் தூள், ‘பேக்கேஜிங்’குக்கு அனுப்பப்படுகிறது. மகாய்பாரி தேயிலை எஸ்டேட்டில்தான் முதல் முறையாக இயற்கை விவசாய முறை பின்பற்றப்பட்டது. இந்த எஸ்டேட்டை தொடர்ந்து, தற்போது டார்ஜீலிங் பகுதியில் உள்ள அனைத்து டீ எஸ்டேட்களும் இயற்கை விவசாய முறைக்கு வந்துவிட்டன. பார்க்கும் இடங்களிலெல்லாம் பசுமையின் ஆட்சி, தழுவும் குளிர், மலைகளின் மீது நழுவும் மேகங்கள் என்று தேயிலை உற்பத்தித் தலமாக மட்டுமின்றி, ஒரு சிறந்த சுற்றுலாப் பகுதியாக இருக்கவும் தகுதி பெற்றதாக மகாய்பாரி தேயிலை எஸ்டேட் விளங்குகிறது. அதனால்தான் இந்த இயற்கையின் மடியில் சில நாட்கள் வசிக்கவும், இந்தச் சூழலிலேயே டீயை ருசிக்கவும் உலகெங்கிலும் இருந்து ஏராளமானோர் இங்கு வருகின்றனர். அவர்களுக்கு என, இப்பகுதியில் உள்ள வீடுகளில் இடம் ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். நாள் வாடகையான ரூ. 750 கொடுத்தால், சாப்பாட்டுடன் வசதியாக தங்கலாம். எப்போதும், எவ்வளவு வேண்டுமானாலும் டீயை ருசிக்கலாம். இயற்கை முறையில் விளைவிக்கப்படும் டீ என்பதால், எவ்வளவு ருசித்தாலும் பிரச்சினையில்லை என்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் இருந்து மகாய்பாரி தேயிலை எஸ்டேட் வந்திருக்கும் மென்பொருள் பொறியாளரான கிளென் லிண்ட்ஸ்ட்ராம் அப்படி ஒரு டீ பிரியர். ‘‘இங்குள்ள சூழ்நிலை அருமை. இங்கே தொழிலாளர்கள் ஆங்காங்கே தங்கியிருப்பதும், பாட்டுப் பாடிக்கொண்டே இடைவிடாது

பணிபுரிவதும் வியப்பூட்டுகிறது'' என்கிறார் கிளென் வியப்பு மாறாமல். மகாய்பாரி தேயிலை எஸ்டேட்டின் வருடாந்திர உற்பத்தியான 1.3 மெட்ரிக் டன்னில் பெரும் பகுதி அமெரிக்காவுக்கும், அதைத் தொடர்ந்து இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1859–ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட மகாய்பாரி தேயிலை எஸ்டேட், இந்தியாவிலேயே பழமையான தேயிலை எஸ்டேட்களில் ஒன்று. ஆனால், 700 பேர் பணிபுரியும் இந்த எஸ்டேட்டின் வரலாறு மாறப்போகிறது. ஆம், இந்த எஸ்டேட்டின் பரம்பரை உரிமையாளரான ராஜா பானர்ஜி, இதை கைமாற்றிவிடத் தீர்மானித்திருக்கிறார். வெளிநாட்டில் வளர்ந்த பானர்ஜியின் அடுத்த தலைமுறை, தேயிலைத் தொழிலில் ஆர்வம் காட்டாததுதான் காரணம். இப்போதே தனது நிறுவனத்தின் 90 சதவீதப் பங்குகளை, கொல்கத்தாவைச் சேர்ந்த தேயிலை நிறுவனமான லட்சுமி குழுமத்துக்கு பானர்ஜி விற்றுவிட்டார்.

## பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகரிப்பு



பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகரித்து இருந்தது. வாழைத்தார் ஏலம் பொள்ளாச்சி மார்க் கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன் கிழமைகளில் வாழைத் தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு தூத்துக்குடி, கணியூர், புதுக் கோட்டை போன்ற பகுதி களில் இருந்தும், பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இருந்தும் வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு செவ்வாழை, மோரீஸ், பூவந்தார், கற்பூர வள்ளி, சாம்பூராணி, நேந்திர பழம், கதளி போன்ற அனைத்து வகையான வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகின்றன.

வரத்து அதிகரிப்பு

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் மார்க் கெட்டில் வாழைத்தார் ஏலம் நடை பெற்றது. ஏலத்துக்கு பல்வேறு இடங்களில் இருந்து 2500 தார்கள் கொண்டு வரப்பட் டன. ஏலத்தில் அதிகபட்சமாக பூவந்தார் ரூ.150 முதல் ரூ.500 வரைக்கும், செவ்வாழை ரூ.150-400, மோரீஸ் ரூ.200-400, நேந்திரம் கிலோ ரூ.40-க்கும், கதளி ஒரு கிலோ ரூ.40-க்கும் ஏலம் போனது. இதுகுறித்து வாழைத்தார் வியாபாரி ஒருவர் கூறிய தாவது:- பொள்ளாச்சி மார்க் கெட்டுக்கு கடந்த வாரங் களில் 1500-க்கு மேல் வாழைத் தார்கள் வந்தன. ஆனால் நேற்று நடந்த ஏலத்துக்கு விளைச்சல் அதிகரிப்பு காரணமாக 2 ஆயிரத்து 500 வாழைத்தார்கள் வந்தன. விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட வில்லை. தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 2 நாட்களே உள்ள தால் வாழைத்தார்கள் விற் பனை அமோகமாக இருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஆனைமலையில் நவீன தொழில் நுட்ப சாகுபடியால் 50 டன் வெள்ளரிக்காய் விளைச்சல் விவசாயிகள் மகிழ்ச்சி**



ஆனைமலை பகுதி யில் நவீன தொழில் நுட்பத்தில் 50 டன் வெள்ளரிக்காய் விளைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விவசாயம்

ஆனைமலை வட்டாரத்தில் விவசாயம் பிரசித்தி பெற்ற முதன்மை தொழிலாக திகழ்ந்து வருகிறது. தென்னை, நெல், கரும்பு, வாழை, நிலக்கடலை, காய்கறிகள் என ஏராளமான பயிர்கள் அதிக ளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சமீப காலமாக நவீன தொழில் நுட்ப உதவியுடன் வெள்ளரிக் காய் சாகுபடி செய்யும்

பணியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## பசுமை குடில்

சூரிய ஒளி, காற்று, பனி, மழை என எதுவும் எளிதில் நுழையாத வண்ணம் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பசுமை குடில் அமைத்துள் ளனர். அதில் நெதர்லாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட உயர் விளைச்சல் தரக்கூடிய சூப்பர் ஸ்டார் உயர்ரக வெள்ளரிக் காய் சாகுபடி செய்துள்ளனர். இந்த வெள்ள ரிக்காய் கொடிகள் தற்போது விவசாயி களுக்கு நல்ல வருமானம் தரத் தொடங்கி உள்ளன. ஆனைமலையை அடுத்த தாத்தூரில் ஒரு விவசாயி குடிலில் ¾ ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட வெள்ளரிக்காய் இதுவரை 50 டன் விளைச்சலை கொடுத்துள்ளன. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:-

## 120 நாட்களில் 50 டன்

நெதர்லாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட 120 நாட்கள் ஆயுள் கொண்ட வெள்ளரி நாற்றுகள் கொடியாக படரக் கூடி யவை. முதல் 30 நாட்களுக்குள் வளர தொடங் கும் வெள் ளரிச் கொடிகள் 40-வதுநாள் முதல் மகசூல் தரத்தொடங்குகின்றன. சாதாரணமாக வளரக்கூடிய வெள்ளரிக்காய் ஒரு ஏக்கருக்கு 2 டன் முதல் 3 டன் வரை விளைச் சலை கொடுக்கும். ஆனால் இந்தஉயர் ரக வெள்ளரிக்காய் ஒரு நாளைக்கு 1 டன் முதல் அதிகபட்சமாக 3 டன் வரை மகசூல் கொடுக் கிறது. 120 நாட்களில் 50 டன் மகசூல் கிடைத் துள்ளது. இந்த வெள்ளரிக் காய்க்கு கேரளாவில் நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.17 வரை விலை கிடைக்கிறது. இது எங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# <u>மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 109 மில்லி மீட்டர் பதிவு</u>



மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 109 மில்லி மீட்டர் மழை பதிவாகியது.

வடகிழக்கு பருவ மழை

வளிமண்டலத்தின் மேலடுக்கில் ஏற்பட்ட சுழற்சியின் காரணமாக கடலூர் மாவட்டத்தில் கடந்த 16-ந் தேதி முதல் கன மழை பெய்து வந்தது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவ மழை முற்றிலுமாக முடிந்து, வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ளது. இதற்கிடையில் தமிழகம் மற்றும் இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த பகுதி உருவானது. தற்போது அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே நிலையில் நீடித்து வருவதால் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும், சில இடங்களில் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

சாக்கடை நீர்

அதன்படி கடலூரில் நேற்று அதிகாலை 3 மணிக்கு தொடங்கிய மழை காலை 9 மணி வரை நீடித்தது. அதன்பிறகு வானம் மேக மூட்டமாக காட்சி அளித்தது. இருப்பினும் இந்த மழையினால் முக்கிய சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கி நின்றது. நகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரப்படாததால் ஆங்காங்கே தெருக்களில் மழைநீருடன் சேர்ந்து சாக்கடை நீரும் கலந்து செல்கிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமப்பட்டு உள்ளனர். மழையின் காரணமாக கடலூர் கெடிலம் ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. இதில் கடலூர் கம்மியம்பேட்டை பாலம்

அருகே புதிதாக கட்டப்பட்ட தடுப்பணை நிரம்பி, மழைநீர் வெளியேறி வருகிறது. இதில் கழிவுநீர் அதிக அளவில் கலந்து செல்வதால் துர்நாற்றம் வீசி வருகிறது. இதை தடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

109 மில்லி மீட்டர் மழை

இதேபோல் பரங்கிப்பேட்டை, சிதம்பரம், சேத்தியாத்தோப்பு, கடலூர், அண்ணாமலைநகர், காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை, பண்ருட்டி, விருத்தாசலம், குப்பநத்தம் உள்பட பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து விட்டு, விட்டு பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 109 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. குறைந்தபட்சமாக காட்டு மயிலூரில் 6 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. சராசரியாக 32.96 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

மக்கள் கூட்டம் குறைவு

தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையினால் தற்காலிக கடை வைத்துள்ளவர்களும், நடைபாதை வியாபாரிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடலூரில் லாரன்ஸ் சாலை, நேதாஜிதெரு, பாரதிசாலை ஆகிய இடங்களில் வியாபாரம் இன்றி நடைபாதை வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர் மழையினால் நேற்று முன்தினம் ஜவுளிக்கடைகளில் கூட்டம் குறைவாக காணப்பட்டது. நேற்று காலை 9 மணிக்கு பிறகு மழை இல்லாததால் கடலூரில் உள்ள ஜவுளிக்கடைகளில் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. பட்டாசு விற்பனையும் மந்தமாக இருந்து வருகிறது. தொடர்ந்து மழை பெய்தால் பட்டாசு விற்பனை பெரிய அளவில் பாதிக்கப்படும் நிலை உள்ளதாக வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

**<u>கொடைக்கானலில் கொட்டித்தீர்த்த மழை ஏரியில் தண்ணீர் நிரம்பி வழிகிறது</u>**



கொடைக்கானல் நகர் பகுதியில் பலத்த மழைபெய்து வருவதால், அங்குள்ள ஏரியில் தண்ணீர் நிரம்பி வழிகிறது.

அணைகளின் நீர்மட்டம்

கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்றும் அதிகாலை முதல் சிறிது நேர இடைவெளியில் சாரல் மழை பெய்து வந்தது. அதன்பிறகு பிற்பகல் 12.30 மணி முதல் சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை கொட்டித் தீர்த்தது. இதனால் அனைத்து சாலைகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக சில பகுதிகளில் சாலையில் லேசான மண்சரிவு ஏற்பட்டது. ஆனால் போக்குவரத்து பாதிக்கப்படவில்லை. இந்த மழையின் காரணமாக கொடைக்கானல் நகர் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கும் பழைய அணையின் நீர்மட்டம் 16 அடியை கடந்துள்ளது. இந்த அணையின் மொத்த உயரம் 18 அடி. அதேபோல் அங்குள்ள புதிய அணையில் தற்போது 29 அடி தண்ணீர் உள்ளது. அந்த அணையின் மொத்த உயரம் 36 அடி. இந்த மழை கொடைக்கானல் நகர் மக்களின் குடிநீர் தேவையை சுமார் 6 மாதங்களுக்கும் மேலாக பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்வீழ்ச்சிகளில் வெள்ளம்

இந்த தொடர்ச்சியான மழையினால் கொடைக்கானல் நகரை ஒட்டியுள்ள வெள்ளி நீர்வீழ்ச்சி, பாம்பாறு அருவி மற்றும் பியர்சோலா (கரடிசோலை) அருவி ஆகிவற்றிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து விழுகிறது. இந்த காட்சி அங்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவரையும் ஆர்வத்துடன்ரசிக்கும்படிசெய்கிறது. இதற்கிடையே ஏற்கனவே பெய்திருந்த மழையினால் கொடைக்கானல் ஏரி நிரம்பிய நிலையில்

காணப்பட்டது. தற்போது மழை நீடித்து வரும் நிலையில் ஏரியில் இருந்து உபரிநீர் அதிக அளவில் வெளியேறுகிறது. கொடைக்கானலில் மழை தொடருவதால் பகலிலும் குளிர் அதிகமாக உள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று இரவு வரை நகர் பகுதியில் சாரல் மழை தொடர்ந்து கொண்டே இருந்தது.

**காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த மழை**

காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது.

பலத்த மழை

காஞ்சீபுரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இதனால் நகரில் பல்வேறு இடங்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நின்றது. மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:-

தாம்பரம் -100.30 மி.மீ., மாமல்லபுரம் -57 மி.மீ, கேளம்பாக்கம் -50.80 மி.மீ., திருக்கழுக்குன்றம் -39 மி.மீ, உத்திரமேரூர் -28 மி.மீ., செங்கல்பட்டு -11 மி.மீ., செய்யூர் -10.50 மி.மீ., ஸ்ரீபெரும்புதூர் -8 மி.மீ., மதுராந்தகம் -5 மி.மீ., காஞ்சீபுரம் -4 மி.மீ.

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. மழை காரணமாக நேற்று மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது. திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்த மொத்த மழை அளவு விபரம் வருமாறு:-

திருவள்ளூர்- 48 மி.மீ., பொன்னேரி- 51 மி.மீ., ஊத்துக்கோட்டை- 9 மி.மீ., கும்மிடிப்பூண்டி- 16 மி.மீ., திருத்தணி- 22 மி.மீ., பூந்தமல்லி- 36 மி.மீ., அம்பத்தூர்- 14 மி.மீ., பூண்டி- 56 மி.மீ., செம்பரம்பாக்கம்- 95 மி.மீ., சோழவரம்- 30 மி.மீ., தாமரைப்பாக்கம்- 21 மி.மீ., ஆர்.கே.பேட்டை- 16 மி.மீ., செங்குன்றம்- 54 மி.மீ., திருவாலங்காடு- 66 மி.மீ. ஆகும்.

**<u>வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு ரூ.2½ கோடியில் உபகரணங்கள் வழங்கப்பட்டு உள்ளன கலெக்டர் தகவல்</u>**



கரூர் மாவட்ட வேளாண்மை பொறி யியல் துறை மூலம் விவசாயிகளுக்கு ரூ.2 கோடியே 64 லட்சத்தில் வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட்டு உள்ளன என்று கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

பல்வேறு திட்டங்கள்

விவசாயிகளின் வாழ்க்கை தன்னிறைவு அடையும் போதுதான் நாடு வளம் பெறும் என்பதற்கு ஏற்ப தமிழக அரசு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் கரூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல்துறை மூலம் கடந்த ஆண்டு ரூ.2 கோடியே 64 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. பெறப்பட்ட நிதி மூலம் செயற்கை முறை செறிவூட்டுதல் திட்டம், மழைநீர் சேகரிப்பு மற்றும் ஓடுநீர் மேலாண்மைத்திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தித்திட்டம், வேளாண் எந்திரங்கள் வழங்கும் திட்டம் மற்றும் தமிழ்நாடு நீர்¢¢வள நிலவளத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங் கள் சிறப்பாகச் செயல்படுத் தப்பட்டு வருகின்றது. அதன் படி செயற்கை முறை செறி வூட்டுதல் திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு பணிகள் நிலத்தடிநீர் குறைவாக உள்ள இடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அங்கு பண்ணைக் குட்டைகள் அமைக்கப் பட்டது. அதே போன்று தடுப் பணைகள், கிராம குட்டை மற்றும் கசிவுநீர் குட்டை அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றது.

பணிகள்

இதே போன்று தனிப் பட்ட விவசாயிகளுக்கு பண் ணை குட்டைகள்

செயல்படுத்தப் படுகிறது. செயற்கை முறை செறி வூட்டல் திட்டத்தின் கீழ் ரூ.34 லட்சத்து 10 ஆயிரத்தில் 6 கசிவுநீர் குட்டைகள் அமைக் கும் பணிகள் முடிக்கப்பட் டுள்ளது. இதே போன்று மண்வளப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் பண்ணைக் குட்டை, தடுப்பு பணை, கிராமக்குளம் மற்றும் கசிவு நீர் குட்டை அமைத்தல் போன்ற பணிகள் செயல் படுத்தப்படுகிறது.

மழை நீர் சேகரிப்பு

ஒவ்வொரு நீர்வடிப்பகுதி யிலும் நீர்வடிப்பகுதி சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் பணிகள் செயல்படுத்தப்படுகிறது. இந்த பணிகளுக்கு 10 சதவீதம் தொகை விவசாயிகள் பங்களிப்பாகப் பெறப்பட்டு மீதமுள்ள 90 சதவீதம் தொகை அரசு பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மழைநீர் சேகரிப்பு மற்றும் ஓடுநீர் மேலாண்மைத் திட்டத்தில் 14 பண்ணைக் குட்டைகளும், ஒரு கிராமிய குளமும், ஒரு கசிவு நீர் குட்டை என 16 பணிகளுக்கு ரூ.14 லட்சத்து 40 ஆயிரம் செலவிடப்பட்டு உள்ளது. இதன் மூலம் 14 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மானியம்

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நவீன வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. புதிதாக வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படும் வேளாண் எந்திரங்களுக்கு 50 சதவீதமும், தற்பொழுது புழக்கத்தில் உள்ள எந்திரங்களுக்கு 25 சதவீத மும், இருபாலரும் இலகுவாக இயக்கக்கூடிய கருவிகளுக்கு 50 சதவீதம் மானியமாக வழங் கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.1 கோடியே 86 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் 349 கருவிகள் மற்றும் எந்திரங்கள் கரூர் மற்றும் குளித்தலை வேளாண் பொறியியல் அலுவலகங்கள் மூலம் 131 விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டு உள்ளது.

டிராக்டர்

இதே போன்று வே ளாண் எந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு டிராக்டர், பவர் டில்லர் போன்ற கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. எந்திரங்களுக்கு 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.45 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

நவீன வேளாண் கருவிகள் மற்றும் எந்திரங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்து ரூ.1 லட்சத்து 22 ஆயிரம் செலவில் 80 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதே போன்று நவீன வேளாண் கருவிகள் மற்றும் எந்திரங்கள் குறித்த செயல் விளக்கங்கள் 27 இடங்களில் ரூ.81ஆயிரம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டது. அதன் மூலம் 644 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

உபகரணங்கள்

உலக வங்கி நிதி உதவியுடன் அமராவதி வடிநில பாசனப்பகுதியில் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் மூலம் வேளாண்மை செய்து நீரை சிக்கனப்படுத்தி அதிக வருவாய் பெற வழிவகை செய்யப்படுகிறது. மேலும் மழைநீர் தேக்க கட்டுமானங்கள் நீர் வரும் ஓடைகளில் அமைக்கப்பட்டு நிலத்தடி நீர் சேமிக்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனப்பணிக்காக ரூ.14 லட்சத்து 12 ஆயிரத்திலும், மழைநீர் சேகரிப்பு கட்டு மானப்பணிகள் ரூ.13 லட்சத்து 19 ஆயிரத்திலும் செயல் படுத்தப்பட்டு 25 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அதன்படி கரூர் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மொத்தம் ரூ.2 கோடியே 64 லட்சத்தில் ஏராள மான விவசாயிகளுக்கு உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார்.

**<u>தொடர் மழை எதிரொலி முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தேனி, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட 5 மாவட்டங்களின்

ஜீவாதாரமாக முல்லைப்பெரியாறு அணை திகழ்கிறது. இந்த அணையில் இருந்து பெறப்படும் தண்ணீர் மூலம் சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலப்பரப்பில் இருபோக நெல் விவசாயம் செய்யப்படுகிறது. முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கடந்த 13–ந் தேதி அணையின் நீர்மட்டம் 125.10 அடியாக இருந்தது. தற்போது பெய்து வரும் மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 126 அடியை எட்டியது. அணைக்கு வினாடிக்கு 1,903 கன அடி நீர்வரத்தும், 1,400 கன அடி நீர் வெளியேறுகிறது. அணையில் 3,834 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 43.77 அடி. வினாடிக்கு 1,652 கன அடி நீர்வந்து கொண்டு இருக்கிறது. 1,760 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 1,279 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**<u>கல்லாறு ஓடையின் குறுக்கே ரூ. 33 கோடியில் புதிய ஏரி அமைக்கும் பணி கலெக்டர் பார்வையிட்டார்</u>**



கல்லாறு ஓடையின் குறுக்கே ரூ.33 கோடியில் புதிய ஏரி அமைக்கும்

பணியை கலெக்டர் தரேஸ் அஹமது பார்வை யிட்டார்.

புதிய ஏரி

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டத்தில் கல்லாறு ஓடையின் குறுக்கே பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார துறையின் மூலமாக செம்மலை, பச்சை மலை ஆகிய மலைகளின் இடையே மலைப்பகுதியில் பெய்யும் நீரை வீணாகாமல் தடுத்து விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு பயன் படுத்தும் வகையில் ரூ.33 கோடியில் 665 மீட்டர் நீள முள்ள ஏரி கரையுடன் கட்டப் பட்டு வருகின்றது. இந்த ஏரி அமைக்கப்படுவதன் மூலம் 30.67 மில்லியன் கனஅடி நீரை சேமிக்க இயலும். இந்த ஏரியின் நீர்ப்போக்கி அமைக்க 11 மீட்டர் உயரத்திற்கு கான்கீரிட்டினால் ஆன பலமான கட்டுமான அமைப்பு அமைக்கப் பட்டுள்ளது. இந்த நீர் போக்கியின் இருபுறமும் மலையுடன் இணைக்கும் வகையில் 12 மீட்டர் உயரத் திற்கு கரைகள் அமைக்கப்பட்டு மண் அரிப்பு ஏற்படாத வண்ணம் கருங்கல் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாசன வசதி

இந்த ஏரி அமைக் கப்படுவதன் மூலம் நேரடியாக 859 ஏக்கர் புன்செய் நிலம் பாசன வசதி பெறும். மேலும் ஆற்றின் மதகின் மூலம் வெங்கலம் ஏரிக்கு கீழ் உள்ள சுமார் 421.41 ஏக்கர் ஆயக் கட்டிற்கு உறுதி செய்யப்பட்ட நீரும், நிலத்தடி நீர் செறி வூட்டப்படுவதால் கிணற்றுப் பாசனம் மூலம் கூடுதலாக 169 ஏக்கர் புன்செய் நிலங்களும் பாசன வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மறைமுகமாக 2,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இந்த ஏரிக்கு அன்னமங்கலம் வழியாக வரும் வகையில் அரசலூர் மற்றும் விசுவக்குடி வரையில் 1.20 கி.மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக் கப்பட உள்ளது. ஏரியின் திட்டப் பணிகளின்படி தேக்கப்பட உள்ள 30.67 மில்லியன் கனஅடி நீருடன், ஏரியின் உட்பகுதியில் ஆழப் படுத்துவதன் மூலம் மேலும் 10 மில்லியன் கனஅடி நீரை சேமிக்கும் வகையிலான கருத் துரு மாநில திட்டக்

குழுவிற்கு மாவட்ட நிர்வாகத்தினால் பரிந்துரை செய்யப்பட்டுள் ளது. ஏரி அமைக்கும் பணிகளில் ஷட்டர் மூலம் நீர் வெளி யேற்றும் பகுதியில் நீரின் வேகத்தை கட்டுப்படுத்த பெரிய அளவிலான கற்கள் பொக்லைன் எந்திரத்தின் மூலம் நடைபெற்று வரு வதையும், ஏரிக்காக 12 மீட்டர் உயரத்தில் அமைக்கப் பட் டுள்ள கரைப்பகுதியில் நடந்து சென்று மலைப்பகுதி இயற்கை எழிலுடன் அழகுற தெரிவதையும், நீர்வழிந் தோடிக்காக அமைக்கப் பட்டுள்ள கான் கிரிட் கட்டுமான பணிகளை யும்கலெக்டர் தரேஸ் அஹமது பார்வையிட்டார்.

சுற்றுலா தலம்

பின்னர் அவர் பொதுப் பணித்துறை அலுவலர்களிடம் பெரம்பலூர் மாவட்டத்தின் பிரதான சுற்றுலா தலமாக இந்த ஏரியை உருவாக்கும் வகையில் ஏரியின் கீழ் பகுதியில் பூங்காவும், ஏரியின் கரைப்பகுதியில் பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை அமைக்கவும், அணைப் பகுதி பொதுமக்கள் வரும் வகையில் தொண்ட மாந்துறை வழியாக மேலும் ஒரு சாலை அமைக் கவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் வை.வேல் முருகன், உதவி பொறியாளர் கார்த்திக், பொதுப்பணித் து¬றையின் தரக்கட்டுப் பாட் டுக் கோட்ட செயற் பொறியாளர் சிசில், உதவி செயற்பொறியாளர் கீதா, உதவி பொறியாளர் லதா ஆகி யோர் கலந்து கொண் டனர்.

## <u>ராமநாதபுரத்தில் கொட்டித்தீர்த்தது அடைமழை விவசாய பணிகள் தீவிரம்</u>



தொடர்மழை காரணமாக ராமநாதபுரம் அருகே விவசாயப்பணியில் ஈடுபட்டுள்ள பெண்ணை படத்தில் காணலாம்.

ராமநாதபுரம், ராமநாதபுரத்தில் அடை மழை கொட்டித்தீர்த்தது.

அடைமழை

தென்மேற்கு வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் கார ணமாக தமிழகத்தில் கடந்த 3 நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த குறைந்த காற் றழுத்த தாழ்வுநிலை மற்றும் வடகிழக்கு பருவமழை முன் னரே தொடங்கிய காரணத் தால் குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 3 நாட் களாக இடை விடாது அடை மழை கொட்டித்தீர்த்து வரு கிறது. கடந்த 2 ஆண்டுகளாக பெய்யாது பொய்த்த மழை தற்போது தொடர்ந்து பெய்து வருவது மக்களுக்கு மகிழ்ச் சியை ஏற்படுத்தி உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொடங்கிய மழை விடிய விடிய பெய்து நேற்று முன்தினம் காலை தான் ஓய்ந் தது. இதன் பின்னர் மாலை யில் தொடங்கி இரவு வரை அடைமழையாக விடாது கொட்டித்தீர்த்தது. குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்திலேயே மிகவும் அதிக அளவாக நேற்று முன் தினம் ராமநாதபுரத்தில் 93.2 மில்லி மீட்டர் மழை பெய் துள்ளது. இந்த தொடர் மழை யால் கடந்த பல மாதங்களாக மழையின்றி விரிசலாக காணப் பட்ட நீர்நிலைகள் எல்லாம் குறிப்பிடத்தக்க அளவில் தண்ணீர் சேர்ந்துள்ளது. கண் மாய்கள், குளங்கள் போன் றவை இநத 3 நாள் மழைக்கு அதன் முழு அளவை ஏறத் தாழ எட்டும் அளவுக்கு வந் துள்ளது. மற்றபடி ஊரணி கள், பெரிய கண்மாய்கள் போன்றவற்றில் குறிப்பிடத் தக்க அளவுக்கு தண்ணீர் சேர்ந்துள்ளது. பல மாதங்க ளாக தண்ணீரின்றி காணப் பட்ட நீர்நிலைகளில் தண் ணீர் சேர்ந்துள்ளதை காணும் மக்கள் மனம் மகிழ்ச்சியடை வதை பார்க்க முடிகிறது.

விவசாய பணிகள்

ராமநாதபுரத்தில் பெரிய கண்மாய்க்கு அடுத்தபடியாக பரப்பளவு அதிகம் உள்ள சக் கரக்கோட்டை கண்மாய் தொடர்மழையால் தண்ணீர் சேர்ந்து நீர்த்தேக்கம் போல தோன்றுகிறது. மாவட்டம் முழுவதும் பெய்துள்ள இந்த தொடர்மழையால் அனைத்து பகுதிகளிலும் மழைநீர் தேங் கி யுள்ளது. தாழ்வான பகுதி களில் உள்ள வீடுகள் உள் ளிட்ட அனைத்து குடியிருப்பு பகுதிகளையும் மழை வெள் ளம் சூழ்ந்துள்ளது. தொடர் மழை ஒரு பக்கம் மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினா லும்

வெளியே செல்ல முடி யாத அளவுக்கு மழை பெய்து வருவதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள் ளது. இதனால் பள்ளி மற்றும் வேலைகளுக்கு செல்வோர் அவதியடைந்து வருகின்றனர். மாவட்டத்தில் பெய்து வரும் இந்த அடைமழையால் நிலத்தடி நீர்மட்டம் கணிச மாக உயர்ந்து வருகிறது. தற் போது கிணறுகளில் சுமார் 3 அடி உயரம் வரை நீர்மட் டம் உயர்ந்துள்ளது. பருவ மழைக்கு முன்னரே நல்ல அறிகுறியாக மழை பெய்யத் தொடங்கி உள்ளதால் விவசா யிகள் இந்த ஆண்டு விவசா யம் நிச்சயம் கைகொடுக்கும் என்ற நம்பிக் கை யில் விவசாய பணிகளை தொடங்கி உள்ள னர். களை எடுத்தல், உரம் போடுதல், தண்ணீர் பாய்ச்சு தல், அதிகளவு தண்ணீரை வெளியேற்றுதல் என அதி கா லையிலேயே ஆர்வமுடனும், உற்சாகத்துடனும் வயல் வெளிகளில் விவசாய பணி களை மேற்கொண்டு வருகின் றனர்.

மழையளவு

வானம் பார்த்த விவசாயம் மட்டுமல்லாமல் கண்மாய் பாசன விவசாயிகளும் வைகை தண்ணீர் வரும் என்ற நம்பிக் கையில் தங்களது வயல்களில் நாற்று பாவும் பணியில் ஈடு பட்டுள்ளனர். இந்த மழை யால் மனிதர்கள் மட்டு மின்றி மரம், செடி, கொடிகளும் பச்சை பசேல் என்று காட்சிய ளிக்கின்றன. மாவட்டம் முழு வதும் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு:- ராமநாதபுரம் -93.2, பரமக்குடி-24.2, கமுதி- 14.6, பாம்பன்-10.9, திருவா டானை-36, தொண்டி -66.5, ராமேசுவரம்-20.2, தங்கச்சிம டம்-15.2, ஆர்.எஸ்.மங்கலம்- 65, கடலாடி-57.1, வட்டா ணம்-65, வாலிநோக்கம்-45.8, பள்ளமோர்குளம்-32, மண்ட பம்-14.6, தீர்த்தாண்டதானம் -66, முதுகுளத்தூர்-20. மாவட்டத்தில் சராசரியாக 40.39 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.**திருப்புவனத்தில் 60.8 மில்லி மீட்டர் மழை பதிவு கண்மாய், ஊரணிகளுக்கு தண்ணீர்வரத்து**

# அதிகரிப்பு



திருப்புவனத்தில் 60.8 மில்லி மீட்டர் மழை பதி வாகியுள்ளது. தொடர் மழையால் மாவட்டத்தில் உள்ள கண்மாய், ஊரணி களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

தொடர் மழை

வடகிழக்கு பருவமழை தொடங்கியதையொட்டியும், இலங்கை பகுதியில் உருவான குறைந்தகாற்றழுத்த மண்ட லத்தை தொடர்ந்தும் சிவ கங்கை மாவட்டத்தில் நேற்று இரவு முதல் தொடர்ந்து அடை மழை பெய்து வருகிறது. இந்த மழையால் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், கண்மாய், ஊரணிகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மாவட்டத்தில் பல இடங்களில் தாழ்வான பகுதிகளில் தண் ணீர் வெள்ளம் போல் ஓடி யது. சிவகங்கை நகர் காந்திவீதி, சிவன் கோவில், அரண்மனை வாசல் உள்ளிட்ட பகுதிகளில் கழிவு நீர் வாய்க்கால்கள் நிரம்பி தெருக்களில் முழங்கால் அளவுக்கு தண்ணீர் ஓடியது. காரைக்குடியில் காலை முதல் மாலை வரை தொடர் மழை பெய்து வருகிறது.

அதிகபட்ச மழை

நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

காரைக்குடி 8, மானாமதுரை 31.6, சிவகங்கை 12, திருப்பு வனம் 60.8, திருப்பத்தூர் 18, இளையான்குடி 16, தேவ கோட்டை 27.3. மாவட்டத்தில் அதிக அளவாக திருப்பு வனத்தில் 60.8மில்லிமீட்டர் மழையும், மிக குறைந்த அள வாக காரைக்குடியில் 8மில்லி மீட்டர்

மழையும் பெய்துள் ளது. நேற்று பகல் முழுவதும் சூரியனையே காணமுடியாத நிலை காணப்பட்டது.

**<u>தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 72 மி.மீட்டர் பதிவானது</u>**

தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 72 மி.மீட்டர் மழை பதிவானது.

இயல்பு வாழ்க்கை பாதிப்பு

இலங்கை மற்றும் தமிழகத்தையொட்டிய வங்க கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளது. இதனால் தஞ்சை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. தஞ்சையில் நேற்றுகாலை முதல் பிற்பகல் 1 மணி வரை மழை தூறிக் கொண்டே இருந்தது. இதனால் காலையில் பள்ளிக்கு சென்ற மாணவ, மாணவிகள் மழையில் நனைந்து கொண்டும், குடைகளை பிடித்து கொண்டும் சென்றனர். தீபாவளி பண்டிகையையொட்டி தஞ்சை காந்திசாலை, அண்ணாசாலை, பர்மாபஜார் பகுதியில் தரைக்கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் வியாபாரம் பாதிக்கப்பட்டது. மக்கள் வீட்டில் இருந்து வெளியே செல்லாததால் வீதிகள் வெறிச்சோடி காணப்பட்டது. இந்த தொடர் மழையின் காரணமாக பொதுமக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதேபோல் தஞ்சை மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக திருவிடைமருதூரில் 72 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக திருக்காட்டுப்பள்ளியில் 10.4 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது. பிற்பகலில் மழை நின்றாலும் மேகமூட்டமாக தான் காணப்பட்டது. இந்த மழையின் காரணமாக குறுவை சாகுபடி செய்த விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர். ஆனால் சம்பா சாகுபடி மேற்கொண்டு வரும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொடர்ந்து 3 நாட்களுக்கு பலத்த மழை நீடிக்கும்

என வானிலை மையம் அறிவித்துள்ளதால் தீபாவளி வியாபாரம் பாதிக்கும் என வியாபாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

மழைஅளவு

தஞ்சை மாவட்டத்தில் நேற்றுகாலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழைஅளவு மில்லிமீட்டரில் வருமாறு:- அதிராம்பட்டினம்-52, கும்பகோணம்-15.6, பாபநாசம்-11, தஞ்சை-25, திருவையாறு-14, திருக்காட்டுப்பள்ளி-10.4, வல்லம்-16, கல்லணை-18.8, அய்யம்பேட்டை-34, திருவிடைமருதூர்-72, மஞ்சலாறு-53, நெய்வாசல்தென்பாதி-18.6, பூதலூர்-16.6, வெட்டிக்காடு-36.6, ஈச்சன்விடுதி-58, ஒரத்தநாடு-11.5, மதுக்கூர்-59.6, பட்டுக்கோட்டை-43.5, கீழணை- 59.2, குருங்குளம்-33. தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 676.40 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. சராசரி மழைஅளவு 32.21 ஆகும். கடந்த ஆண்டு இதேநாளில் தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 17.30 மில்லிமீட்டர் மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த 2012-ம் ஆண்டு 332.45 மில்லிமீட்டரும், 2013-ம் ஆண்டு 437.42 மில்லிமீட்டரும், இந்த ஆண்டு இதுவரை 459.18 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது.

<u>திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை அதிகபட்சமாக திருத்துறைப்பூண்டியில் 12 மி.மீட்டர் பதிவானது</u>

திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதில் திருத் துறைப்பூண்டியில் அதிக பட்சமாக 12 மி.மீட்டர் பதிவானது.

பரவலாக மழை கடந்த 12–ந் தேதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தை ‘‘ஹூட், ஹூட்’’ புயல் தாக்கி யது. புயல் கரையை கடந்த போது விசாகபட்டினத்தில் 195 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசியது. ஆந்திராவில் புயல் கரையை கடப்பதற்கு முன்னதாக வங்க கடலில் புயல் சின்னம் உரு வாகி, புயல் கரையை நோக்கி நகர்ந்து வந்த நேரத்தில், திரு வாரூர் மாவட்டத்தின்

பல் வேறு பகுதிகளிலும் தொடர்ந்து சில நாட்கள் பரவ லாக மழை பெய்து வந்தது. இதன் காரணமாக மாவட்டத் தில் கோடை காலத்தை மிஞ்சும் வகையில் பொது மக்களை வாட்டி வதைத்து வந்த வெயில் தணிந்தது. கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் இல் லாமல் குளிர்ந்த வானிலையே நிலவி வருகிறது.

பயிர்களுக்கு பலன் வடகிழக்கு பருவ மழை இந்த மாத (அக்டோபர்) இறு திக்குள் பெய்ய என வானிலை ஆய்வு மையம் கடந்த வாரம் அறிவித்து இருந்தது. பருவ மழை தொடங்கும் முன் பா கேவ திருவாரூர் மாவட் டத் தில் மழை பெய்ய தொடங்கி இருக்கிறது. நேற்று மாவட் டத்தின் பல இடங்களில் நல்ல மழை பெய்தது. நேற்று காலை யில் திருவாரூரில் ஒரு மணி நேரம் சாரல் மழை பெய்தது. முத்துப் பேட்டையில் காலை 11.30 மணி முதல் 2.30 மணி வரை இடைவிடாது மழை பெய்தது. மிதமான அளவில் மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்து வரும் மழை பயிர் செய்யப்பட்டுள்ள சம்பா, தாளடி பயிர்களுக்கு பலன் அளிக்கும் விதத்தில் அமைந் திருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்து உள்ளனர். மழை நிலவரம் திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், திருத்துறைப் பூண்டியில் அதிகபட்சமாக 12 மில்லி மீட்டர் மழை பதி வானது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் பதிவான மழை அளவு விவரம் வருமாறு:– மன்னார்குடி–10, நீடா மங்கலம்–10, முத்துப் பேட்டை–9, திருவாரூர்–2, பாண்டவையாறு தலைப்பு–3. சராசரியாக மாவட்டத்தில் 6 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

**<u>உப்புத்தன்மை அதிகம் உள்ள இடங்களை தேர்வு செய்து இறால் பண்ணை அமைக்க நடவடிக்கை கலெக்டர் தகவல்</u>**

இறால் பண்ணையால் சுற்றுச்சூழல், விவசாய நிலங்கள் பாதிக்காத வகையில் நிலத்தின் உப்புத்தன்மை அதிகமாக உள்ள இடங்களை தேர்வு செய்து இறால் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு

உள்ளதாக மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட கலெக்டர் கொ.வீரராகவராவ் தலைமையில் நடந்தது. அப்போது வேளாண் இணை இயக்குனர் சுந்தர்ராஜன், “விவசாயிகளை வேளாண்மைத்துறை அதிகாரிகள் அடிக்கடி சந்தித்து ஆலோசனைகள் வழங்குவதற்காக பயிற்சி வழிதொடர்பு திட்டம் அடுத்த மாதம்(நவம்பர்) 1-ந் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது” என்றார். கூட்டத்தில் விவசாயிகள் சார்பில், திருவள்ளூர் மாவட்டம் சென்னைக்கு அருகில் உள்ளதாலும், விளைபொருட்களை விற்பனை செய்ய ஏற்ற சூழ்நிலை உள்ளதாலும் தோட்ட கலைப்பயிர்களை அதிக அளவில் பயிரிட விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் எனவும், தற்போது மானியத்தில் ஜிப்சம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டது. பின்னர் மாவட்ட கலெக்டர் கொ.வீரராகவ ராவ் பேசியதாவது:-

## இறால் பண்ணை

திருவள்ளூர் மாவட்டத்தில் யூரியா உரம் தடை இன்றி கிடைப்பதற்கு அந்தந்த மாதாத்திய ஒதுக்கீட்டின்படி அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் இருப்பு வைத்து வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இறால் பண்ணையால் சுற்றுச்சூழல் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்காத வகையில், நிலத்தின் உப்புத்தன்மை அதிகமாக உள்ள இடங்களை தேர்வு செய்து அதில் இறால் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. மாவட்டத்தில் தரமான பூச்சி மருந்துகள் அரசு நிர்ணயிக்கும் விலையில் கிடைக்க ஆவண செய்யவும், நீர்குறைவாக உள்ள இடங்களில் அதற்கேற்றவாறு குறைந்த நீரை கொண்டு பயிர் செய்யப்படும் பயிர் குறித்த விபரங்களை அளிக்கவும் மற்றும் கடந்த காலங்களில் மீஞ்சூர், பொன்னேரி பகுதிகளில் நிலத்தின் உப்புத்தன்மையை குறைப்பதற்கு மானியமாக ஜிப்சம் வழங்கியதை போல் மானிய விலையில் வழங்க உரிய

நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

கோரிக்கை மனு

கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டத்தின் செயல்பாடு குறித்த அந்நிறுவனத்தின் உதவி மேலாளரால் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்து, வேளாண்மை இணை இயக்குனர் சுந்தர்ராஜன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) சுப்பிரமணியன், ஆர்.டி.ஓ.க்கள் ஜெயலட்சுமி, பாண்டியன், மேனுவல்ராஜ் உள்பட அனைத்து துறை அலுவலர்கள், திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>3–வது நாளாக தொடர் மழை: கல்வராயன் மலை நீர்வீழ்ச்சிகளில் வெள்ளப்பெருக்கு கோமுகி அணையின் நீர்மட்டம் கிடுகிடு உயர்வு</u>**



கல்வராயன்மலை நீர்ப் பிடிப்பு பகுதிகளில் 3–வது நாளாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக நீர்வீழ்ச்சிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கோமுகி அணையின் நீர் மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

3–வது நாளாக பலத்த மழை

விழுப்புரம் மாவட்டம் கல்வ ராயன் மலை நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் கள்ளக்குறிச்சி பகுதிகளில் கடந்த 3 நாட்களாக இரவு, பகலாக பலத்த மழை கொட்டி வருகிறது. இதனால், கல்வ ராயன் மலை பெரியார் நீர் வீழ்ச்சி உள்ளிட்ட அனைத்து நீர்வீழ்ச்சிகள் மற்றும் அடர்ந்த வனப்பகுதிகளில் உள்ள நீரோடைகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு காட் டாறான கல்படை, பொட் டியம், மாயம்பாடி ஆறுகள் வழியாக

வினாடிக்கு 150 கனஅடி நீர் கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணைக்கு வந்து கொண் டிருக்கிறது. இதனால், 33 அடியில் இருந்த அணையின் நீர்மட்டம் 3 நாட்களில்படிப்படியாக உய ர்ந்து நேற்று மாலை நில வரப்படி 35 அடியை எட் டியுள்ளது.

கல்வராயன்மலை

மேலும், வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ளதால் ஓரிரு தினங்கள் மழை நீடிக்கும் என்பதால், கோமுகி அணை முழு கொள்ளளவை எட்டி விடும் என்பதால் கோமுகி அணை பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், கல்வராயன்மலை அடர்ந்த மலை பகுதிகளில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு பார்ப்பதற்கு ரம்மியமாக காட்சியளிக்கிறது. இதனால், நேற்று சனிக் கிழமை என் பதால் கொட்டும் மழையை பொருட் படுத்தாமல் கள்ளக்குறிச்சியை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் இருசக்கர வாகனங் களில் கல்வராயன்மலைக்கு சென்று பெரியார் நீர்வீழ்ச்சி யில் ஆனந்தமாக குளித்து இயற்கை அழகை ரசித்து சென்றனர்.

கள்ளக்குறிச்சி

இதேபோல், கள்ளக்குறிச்சி நகரில் நேற்று மாலை வரை தொடர்ந்து 3–வது நாளாக பெய்த மழை காரணமாக நகரில் தாழ்வான பகுதிகளான பஸ் நிலையம், காந்தி சாலை, சேலம் சாலை, துருகம் சாலை உள்ளிட்ட வடிகால் ஓடைகள் வழியாக மழைநீர் ஆறாக ஓடியது. இதனால், கடந்த சில மாதங்களாக கடும் வெயிலில் தவித்து வந்த நகர மக்கள் கடந்த 3–நாட்களாக பெய்யும் தொடர்மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், முதியவர்கள், சிறுவர்கள் வீட்டைவிட்டு வெளியே வர முடியாமல் தங்களது வீடு களுக்குள் முடங்கி கிடக் கின்றனர். அதேபோல், கள்ளக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகளான சங்கராபுரம், கச்சிராய பாளையம், சின்னசேலம், ரிஷிவந்தியம், மூங்கில் துறைப் பட்டு, தியாகதுருகம் போன்ற பகுதிகளில் கடந்த 3 நாட் களாக பெய்து வரும் பருவ மழை காரணமாக அப் பகுதிகளில் உள்ள ஏரி, குளங்கள்

உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளும் தற்போது நிரம்பி நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. தொடர்ந்து பெய்து வரும் பருவமழையை அடுத்து கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் நடவு பணிக்கு ஆயத் தமாகி வருகின்றனர். இதே போல், விழுப்புரம், திருக் கோவிலூர், திண்டி வனம், உளுந்தூர் பேட்டை உள்பட மாவட்டம் முழுவதும் நேற்று 3–வது நாளாக மழை அவ்வப்போது விட்டு விட்டு பெய்து கொண்டே உள்ளதால் ஏரி, குளங்கள் வேகமாக நிரம்ப தொடங்கியுள்ளது.